DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative, homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1517 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 2, 2025

## Hon. Gary Anandasangaree re-elected in his Riding of Scarborough Guildwood-Rouge Park with - 35,342 Votes

# கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் மீண்டும் தனது தொகுதியிலிருந்து அதிக வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்






Salma Zahid



Shaun Chen



Jean Yip



Michael Coteau



Bill Blair



Juanita Nathan

கனடியர்களால் மாத்திரமல்ல உலகெங்கும் வாழும் மக்களால் எதிர்பார்க்கப்பட்ட கனடியத் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்று லிபரல் கட்சியின் அரசாங்கமானது இன்னும் சில நாட்களில் பதவியேற்கவுள்ளது.

கடந்த 28ம் திகதி நடைபெற்ற மேற்படி கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் மீண்டும் தனது **Scarborough Guildwood-Rouge Park** தொகுதியிலிருந்து அதிக வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர்களின் விபரங்கள் பின்வருமாறு:-

Gary Anandasangaree - Scarborough Guildwood-Rouge Park- 35,342 Votes
Salma Zahid- Scarborough Centre-Don Valley - 27,542 Votes
Shaun Chen - Scarborough North- 29,428 Votes
Jean Yip- Scarborough Agincourt - 27,569 Votes
Michael Coteau - Scarborough Woburn- 22,534 Votes
Bill Blair- Scarborough South West- 33,390 Votes
Juanita Nathan -Pickering-Brookville - 38,548 Votes
Jennifer McKelvie Ajax - 29,345 Votes

(தொடர்ச்சி 5ம் பக்கம்)



Jennifer Mckelvie

## கனடிய வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தியாளர்கள் இனிமேல் "நிம்மதிப் பெருமூச்சு" விடலாம்!அமெரிக்க அதிபர் ட்ரம்பின் 25 வீத வரி அறவிடுதலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவுள்ளது




அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்கள் தான் பதவியேற்ற நாள் தொடக்கம் கனடிய வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தி செய்பவர்கள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் அவ்வாறான உற்பத்திகளுக்கு 25 வீத வரி அறவிடுவாக விடுக்கப்பெற்ற அறிவிப்பு கனடாவின் பல வாகன உதிரிப்பாகங்கள் தயாரிப்பு தொழிற்சாலைகளுக் "பெரிய" தாக்கமாக மாறத் தொடங்கியது. பல தொழிற்சாலை நிர்வாகங்கள் தங்கள் ஊழியர்களை பணியிலிருந்து நீக்கியிருந்தன.

ஆனால் கனடாவின் பொதுத் தேர்தல் முடிந்து தற்போது பிரதமராக பதவியேற்கவுள்ள மார்க் கானி அவர்கள் உடனடியாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களோடு தொலைபேசியில் உரையாடியதன் பின்னர் பல சாதகமான விடயங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா



கலைமாமணி டாக்டர்
## நித்யஸ்ரீ மகாதேவன்
வழங்கும்
# சங்கீத சங்கமம் 2025



ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்
## ஆறு திருமுருகன்
அவர்கள் வழங்கும் சிறப்புரை
# வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP | $100 | $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
**416-841-9600**
eelanadu1993@gmail.com

*விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.*

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# அமெரிக்க அதிபரை "சமாளிக்கும்" ஆற்றல் பிரதமர் மார்க் கார்னிக்கு இருக்குமானால் இருநாடுகளுக்கும் நல்லது!

கழிந்துபோன கடந்த சில வாரங்கள். கனடாவில், அரசியல், தேர்தல் மற்றும் அமெரிக்காவின் வரிவிதிப்பு தொடர்பாக ட்ரம்ப் அவர்களின் அச்சுறுத்தல் போன்றவை கனடாவில் தேசிய அளவில் மக்களிடையே மிகுந்த பதற்றத்தையும் அத்துடன். தங்களது அவசியமான விடயங்களுக்கு அல்லது பணிகளுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் இழந்து நின்ற காலப்பகுதியாக கடந்து போனது கனடியர்களின் கடந்த சில வாரங்கள்.

ஆனால் கடந்த 28ம் திகதி நடைபெற்ற கனடியத் தேர்தலில் லிபரல் கட்சி ஆட்சியமைக்கும் வெற்றியைப் பெற்ற உடனேயே அடுத்த நாள் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களுடன் பிரதமர் மார்க் கானி தொலைபேசியில் உரையா-டிய விடங்கள் வெளிப்படையாகவே அனைவரோடும் பகிரப்பட்டன. அமெரிக்க அதிபர் கூட கனடியப் பிரதமர் அவர்களோடு உரையாடியமை தொடர்பாக ஆரோக்கியமான அறிக்கையையே வெளியிட்டார்.

கடந்த சில வாரங்களாக கனடாவில் வாகன உற்பத்தி உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் குடும்பங்கள் வேதனையின் விளிம்புகளுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

இவ்வாறான நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்கள் தான் பதவியேற்ற நாள் தொடக்கம் கனடிய வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்தி செய்பவர்கள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் அவ்வாறான உற்பத்திகளுக்கு 25 வீத வரி அறவிடுவாக விடுக்கப்பெற்ற அறிவிப்பு கனடாவின் பல வாகன உதிரிப்பாகங்கள் தயாரிப்பு தொழிற்சாலைகளுக் "பெரிய" தாக்கமாக மாறத் தொடங்கியது.

ஆனால் கனடாவின் பொதுத் தேர்தல் முடிந்து தற்போது பிரதமராக பதவியேற்கவுள்ள மார்க் கானி அவர்கள் உடனடியாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களோடு தொலைபேசியில் உரையாடியதன் பின்னர் பல சாதகமான விடயங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. கனடியர்கள் எதிர்பார்த்த தற்போது நிஜமானவே தோன்றுவதாக மக்கள் கருத்துக்களைப் பகிர்ந்த கொள்கின்றார்கள். நாமும் இரண்டு நாட்டுத் தலைவர்களும் அதிகாரிகளும் என்ன சொல்லப்போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். ஏனென்றால். நடந்த முடிந்த கனடியப் பொதுத் தேர்தலின் போது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களின் பெயர்தான் ஒவ்வொரு நிமிடத்திற்கும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது என்பதும் கவனிக்கத் தக்கதாகும்.




# "யாழ் மாவட்ட கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தங்கள் பிள்ளைகளையும் இணைத்து தமக்கு கல்விச் செல்வத்தை வழங்கிய பாடசாலைகளுக்கு சேவையாற்ற வேண்டும்"

(பின் பக்கத் தொடர்ச்சி)



உதாரணமாக தங்கள் பிள்ளைகளுக்கு சிறு தொகைகளை சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து அந்த தொகைகளை தாயகக் கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும்"

இவ்வாறு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி- கனடா பழைய மாணவர்கள் சங்கத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் மா. சின்னத்தம்பி வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 27ம் திகதி சனிக்கிழமையன்று மிசிசாகா நகரில் உள்ள விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்ற சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி- கனடா பழைய மாணவர்கள் சங்கத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அன்றைய தினம் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி- கனடா பழைய மாணவர்கள் சங்கத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டிய சிறப்பு மலரும் வெளியிடப்பெற்றது. மேற்படி மலரின் முதற் பிரதியை பேராசியர் மா. சின்னத்தம்பி அவர்களுக்கு வழங்கி சிறப்புச் செய்தார சங்கத்தின் முக்கிய உறுப்பினரான திரு ததீஸ் சிவசுப்பிரமணியம்.

மேற்படி விழாவிற்கு அனுசரணையாளர்களாக முன்வந்து ஆதரவு வழங்கியவர்களுக்கும் கௌரவம் செய்யப்பெற்றது. அதில் முதன்மை அனுசரணையாளர்களாக முன்வந்து ஆதரவு வழங்கிய வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி அவர்களும் மேடையில் பிரதம விருந்தினரால் பாராட்டப்பெற்றார்.

**Basement For Rent**

ஸ்காபுறோவில் Mclevin Avenue and Tapscott Road சந்திப்புக்கு அருகாமையில் உள்ள வீடொன்றின் ஒரு அறை மற்றும் குளியல் அறை மற்றும் சமையல் பகுதி ஆகியவை கொண்ட முழுமையான Basement Apartment உடனடியாக வாடகைக்கு உண்டு. வாடகை பேசித்தீர்க்கலாம். விபரங்களுக்கு 416 299 4904

**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160 or 416-893-3216

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அன்றொருபொழுது மக்களின் துயர்துடைக்க எவ்வாறு வந்தேனோ அதேபோன்றுதான் இன்றும் உங்களிடம் வந்துள்ளேன் - நெடுந்தீவில் டக்ளஸ் தேவானந்தா!



நான் நெடுந்தீவுக்கு நன்றியையும் விசுவாசத்தையும் எதிர்பார்த்து வரவில்லை என்று தெரிவித்துள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்த நெடுந்தீவு மண்ணில் அன்றொருபொழுது மக்களின் துயர்துடைக்க பதவிகள் இல்லாது எவ்வாறு வந்தேனோ அதேபோன்றுதான் இன்றும் உங்களிடம் வேறும் டக்ளஸ் தேவானந்தாவாக வெறுமையாகவே என் மக்களை சந்திப்பதற்காக வந்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நெடுந்தீவு பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் ஏட்வேட் யூலியட் குமார் தலைமையில் ஒன்றைபனையடி 05ம் வட்டாரத்தில் இடம்பெற்ற தேர்ரதல் பரப்புரை கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், தீவகத்துக்கும் ஈ.பி.டிபிக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் நீண்ட வரலாறும் எமக்கு உண்டு. தீவக பிரதேசங்கள் அனைத்திலும் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் எமது கட்சியினாலேயே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த செயற்றிட்டங்களின் தொடர்ச்சியை தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் கட்சியின் வீணைச் சின்னத்தை வெற்றிபெறச் செய்து எதிர்காலத்தை தமக்கானதாக உருவாக்கிக் கொள்வார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு நெடுந்தீவிற்கு சென்றுள்ள தோழர் டக்ளஸ் தேவானந்தா கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களை சந்தித்த வேளையே அவர் இதனை தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டி மோதி ஆண் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டி மோதியதில் நபர் ஒருவர் 26ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது வைத்தியசாலை வீதி பகுதியைச் சேர்ந்த அன்ரனி தேவதாஸ் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 24ஆம் திகதி வேலைக்கு சென்றுவிட்டு மாலை வீடு நோக்கி சென்றுகொண்டிருந்தார். இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியில் அவர்மீது முச்சக்கர வண்டி மோதியது. பின்னர் அவர் வீட்டுக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் 25ஆம் திகதி அதிகாலை அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. ஆகையால் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்றிரவு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யாழ்ப்பாண. மாநகரை அபிவிருத்தியால் கட்டியெழுப்பியவர்கள் தாங்கள் என ஈ.பி.டி.பியின் மாநகர சபை வேட்பாளர்கள் சுட்டிக்காட்டு!




காலச் சூழல் யாருக்கானதாக இருக்கப்போகின்றது என்பது முக்கியமல்ல. அது மக்களுக்கானதாக இருக்க வேண்டும் என்பதே அவசியமாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாநகரின் வேட்பாளர் அமிர்தலிங்கம் தவதீசன் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் வேட்பாளர்களான தேவதாசன் கமலதாசன் மற்றும் அமிர்தலிங்கம் தவதீசன், ஆகியோர் யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில், வலுவான கட்சி கட்டமைப்பும் தலைமையின் சிறப்பான வழிநடத்தலும் எமது கட்சியிடம் இருக்கின்றது.

"பிக்மி" நிறுவனத்தின் ஓர் ஊழியராக நான் இருக்கின்றேனே தவிர அது ஈ.பி.டி.பியின் நிறுவனம் அல்ல.

அதேபோன்று ஈ.பி.டி.பியை விமர்சிக்காது எந்தவொரு கட்சிக்கும் வயிற்றுப்பிழைப்பு இல்லை என்ற நிலையே இருந்து வரும் ஒரு அரசியல் சூழல் இருந்து வருகின்றது.

இந்த நிலையை மக்கள் உணர்ந்து மக்களின் நலன்களை முன்கொண்டு செல்லும் எமது கட்சிக்கு ஆதரவு பலத்தை வழங்குங்கள் என்றும் அழைப்பு விடுத்தார்.

அதேநேரம் கடந்த காலங்களில் யாழ் மாநகரில் பல்வேறு மக்கள் நலன் சார் திட்டங்களை செய்த நாம் அவ்வாறான பயணத்தில் தொடர்ந்தும் பயணிக்க இம்முறையும் சந்தர்ப்பத்தை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என ஈ.பி.டி.பியின் வேட்பாளரான தேவதாசன் கமலதாசன் தெரிவித்துள்ளார்.

மேலும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை எல்லாம் மக்களுக்காகவும் மக்களின் தேவைகளை ஈடுசெய்யும் வகையிலும் மேற்கொண்டு அரச தொழில் வாய்ப்புகள் முதல், சிறு கடை வியாபாரங்கள் வரையும் பெற்றுக்கொடுத்து ஏழைகளையும் வாழ்வியலில் ஒளிபெறச் செய்தது கொடுத்தது எமது கட்சியின் வாழ்நாள் சாதனையாக இருக்கின்றது.

அந்தவகையில் இம்முறை நடைபெறும் தேர்தலிலும் எமது கட்சியின் வெற்றியை உறுதி செய்து மக்கள் தமது வாழ்வியலை வெற்றிகொள்வார்கள் என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பி – என்.பி.பி தமிழ் எம்.பி.க்கள்ஆகியோர் தமிழ் மக்களை மட்டும் தோல்வியடையச் செய்யவில்லை

## உலகம் முழுவதும் உள்ள தமிழர்களை அவமதித்துள்ளனர்

வெளித்தோற்றத்தைக் கண்டு தமிழ் மக்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது. ஜேவிபி தலைமையிலான NPP (தேசிய மக்கள் சக்தி) உடன் இணைந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அர்த்தமுள்ள எதையும் செய்யவில்லை.

அவர்களது கட்சி ஆட்சிக்கு வந்தபோதும், தமிழ் அரசியல்கைதிகளின் பட்டியலை வெளியிடவோ அல்லது பகிரங்கமாக வெளிப்படுத்தவோ தவறிவிட்டனர், ஆனால் அவர்கள் இன்னும் இலங்கை சிறைகளில் கைதிகளாகவே உள்ளனர். இந்த எம்.பி.க்கள், காணாமல் போன ஆயிரக்கணக்கான தமிழர்களின் தாய்மார்களையும் அன்பானவர்களையும் ஒரு போதும் சென்று பார்த்ததில்லை.

இன்று, NPP இன் கண்காணிப்பின் கீழ்:


- இலங்கை இராணுவம் இன்னமும் தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்து, அச்சம் மற்றும் கட்டுப்பாடு நிறைந்த சூழலைப் பேணுகிறது.
- புலனாய்வு முகவர்கள் தமிழ் பொதுமக்களை தொடர்ந்து மிரட்டி, சுதந்திரமான கருத்து மற்றும் சிவில் வாழ்க்கையை நசுக்குகின்றனர்.
- தமிழ் சமூகங்களை ஒடுக்கும் மற்றும் கண்காணிக்கும் இராணுவக் கட்டமைப்புகளை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யதார்த்தம் தெளிவாக உள்ளது: ஜே.வி.பி - என்.பி.பி பதாகையின் கீழ் உள்ள தமிழ் எம்.பி.க்கள், தமிழர் தாயகத்தில் சிங்கள அரசின் அடக்குமுறைப் பிடியைத் தக்கவைப்பதில் மௌன ஒத்துழைப்பாளர்களாக இருந்து வருகின்றனர்.

தையிட்டி, வெட்டுக்குமரி போன்ற இடங்களில், மௌனம் காக்காமல், சிங்களக் கொள்கைகளுக்கு எதிராக தைரியமாக கிளர்ச்சிகளை உருவாக்கிய தலைவர்களுக்கும் அவர்களைன் ஆதரவாளர்க்கும் தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்.

திருகோணமலையில் நடைபெற்ற ஊர்வலங்கள் மற்றும் போராட்டங்களின் போது சிங்கள பொலிஸாரின் தடியடிகளை தாங்கி பலமாக நின்ற தமிழ் தலைவர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் வாக்களியுங்கள்.

சுதந்திரத்துடன், உண்மையான தமிழ்த் தலைமை மீட்கப்பட்டவுடன் தமிழர் நிலங்களை முதலீடு செய்து மீளக் கட்டியெழுப்புவதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் டிரில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களுடன் தயாராக உள்ளனர்.




சிங்களக் கட்டுப்பாட்டில் உள்ள ஜே.வி.பி.யிடம் இருந்து சில லட்ச ரூபாய்களை பெற ஏமாறாதீர்கள்.

உள்ளாட்சித் தேர்தலுக்கு உண்மையான தமிழ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுங்கள் - சுதந்திரம், கண்ணியம் மற்றும் வளமான தமிழ் எதிர்காலத்திற்காகப் போராடும் தலைவர்கள்.

இது வெறும் தேர்தல் அல்ல - சிங்கள அடிமை பொருளாதாரம் மற்றும் ஊழல் கொள்கைகளில் இருந்து தமிழ் தேசத்தை விடுவிக்கும் பணியாகும்.

தைரியம், போராட்டம், ஒற்றுமை ஆகியவற்றின் மூலம், தலைமுறைகள் தியாகம் செய்த சுதந்திரம், கண்ணியம், செழுமை ஆகியவற்றை தமிழர்கள் அடைய முடியும்.

கனடிய செய்திகள் Canadian News

## Hon. Gary Anandasangaree, re-elected in his Riding of Scarborough Guildwood-Rouge Park and definitely he will a be a Senior Minister in Mark Carney's New Cabinet.

# 28ம் திகதி நடைபெற்ற கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் கௌரவ ஹரி ஆனந்தசங்கரி மீண்டும் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

கனடியர்களால் மாத்திரமல்ல உலகெங்கும் வாழும் மக்களால் எதிர்பார்க்கப்பட்ட கனடியத் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்று லிபரல் கட்சியின் அரசாங்கமானது இன்னும் சில நாட்களில் பதவியேற்கவுள்ளது.

கடந்த 28ம் திகதி நடைபெற்ற மேற்படி கனடிய நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் மீண்டும் தனது Scarborough Guildwood-Rouge Park தொகுதியிலிருந்து அதிக வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் நிச்சயமாக புதிதாக பதவியேற்கவுள்ள Mark Carney அவர்களின் அமைச்சரவையில் ஒரு அதி முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சராக நியமிக்கப்படுவார் என்பதும் நிச்சயமானதே!

இங்கே காணப்படும் படங்கள் தேர்தல் நடைபெற்ற தினமான 28ம் திகதி அன்றைய தினம் ஆங்காங்கே நடைபெற்ற வெற்றிக் கொண்டாட்டங்களின் போது எமது புகைப்படக் கலைஞர்களால் எடுக்கப்பெற்றவையாகும்.

இந்த தேர்தலில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் வெற்றி பெற்ற பல லிபரல் கட்சியின் வேட்பாளர்கள் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களின் விபரங்கள் பின்வருமாறு:

Hon. Gary Anandasangaree - Scarborough Guildwood-Rouge Park- 35,342 Votes
Salma Zahid- Scarborough Centre-Don Valley - 27,542 Votes
Shaun Chen - Scarborough North- 29,428 Votes
Jean Yip- Scarborough Agincourt - 27,569 Votes
Michael Coteau - Scarborough Woburn- 22,534 Votes
Bill Blair- Scarborough South West- 33,390 Votes
Juanita Nathan -Pickering-Brookville - 38,548 Votes
Janiffer McKelvie Ajax - 29,345 Votes

இவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்!


















இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 3ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் 26ம் திகதி அன்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். கொட்டகல - புனித அன்ரூஸ் தோட்டம் என்ற முகவரியைச் சேர்ந்த கருப்பையா கவிரத்தினம் (வயது 24) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த மாணவன் கொக்குவில் - பிரவுண் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்துள்ளார்.

அந்த இளைஞன் யுவதி ஒருவரை காதலித்து வந்துள்ளார். இவ்வாறு இருக்கையில் குறித்த மாணவனுக்கும் காதலிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இன்று அதிகாலை அவர் இவ்வாறு தூக்கிட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிசார் இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தந்தை செல்வாவின் நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஸ்டிப்பு!

தந்தை செல்வா நிலைய அறக்கட்டளை குழுவின் எற்பாட்டில் தந்தை செல்வாவின் 48 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமையன்று 26ம் திகதி அன்று யாழ். தந்தை செல்வா நினைவிட வளாகத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழரசு க்கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டு தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதனை தொடர்ந்து தந்தை செல்வாவின் நிலைய அறக்கட்டளை குழுவின் உறுப்பினர்கள், சக நண்பர்கள், இலங்கை தமிழரசுக்கட்சியின் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

ஈழத்து தமிழ் பேசும் மக்கள் அரசியலின் தனிகரற்ற தலைவன் தந்தை செல்வா என்னும் தலைப்பில் நினைவு பேருரையினை மொழித்துறை தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் முதுநிலை பேராசிரியர் கலாநிதி றமீம் அப்துல்லா நிகழ்த்தினர்.



# க.பொ.த உயர்தர பரீட்சையில் சாதனை படைத்த யாழ்ப்பாணம். இந்துக் கல்லூரியின் முழுமையான பெறுபேறுகள்!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
JAFFNA HINDU COLLEGE

RESULTS OF THE ADVANCED LEVEL EXAMINATION 2024 (2025)

| | |
|---|---|
| 3A | 55 |
| 2A | 55 |
| A2B | 19 |

| Stream | 3A | 2A | A2B |
|---|---|---|---|
| Bio Science | 22 | 13 | 06 |
| Physical Science | 27 | 16 | 11 |
| Commerce | 01 | 02 | 02 |
| Arts | - | 02 | - |
| Non Stream | 03 | 01 | - |
| B - Tech | 01 | - | - |
| E -Tech | 01 | - | - |

26ம் திகதி சனிக்கிழமையன்று வெளியாகிய 2024ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி 55 3ஏ சித்திகளையும், 55 2ஏ சித்திகளையும், 19 ஏ 2பி சித்திகளையும் பெற்று யாழ்ப்பாணம். இந்துக் கல்லூரி சாதனை படைத்துள்ளது.

அந்தவகையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 22 3ஏ சித்திகளும், 13 2ஏ சித்திகளும், 06 ஏ 2பி சித்திகளும், பௌதீக விஞ்ஞான பிரிவில் 27 3ஏ சித்திகளும், 16 2ஏ சித்திகளும், 11 ஏ 2பி சித்திகளும், வணிகத் துறையில் ஒரு 3ஏ சித்தியும், இரண்டு 2ஏ சித்திகளும், இரண்டு ஏ 2பி சித்திகளும், கலைப்பிரிவில் இரண்டு 2ஏ சித்திகளும், பொது பிரிவில் மூன்று 3ஏ சித்திகளும், ஒரு 2ஏ சித்திகளும், உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் ஒரு 3ஏ சித்தியும், இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவில் ஒரு 3ஏ சித்தியும் பெற்று சாதனை படைத்துள்ளது.

**உயிரியல் விஞ்ஞான பிரிவு**

ஜமுனானந்தா பிரணவன் 3ஏ, ஜமுனானந்தா சரவணன் 3ஏ, ராஜன் ஆபிராம் 3ஏ, சிறிசுந்தரராஜா ஸ்ரீகாந்த் 3ஏ, டெனி கொன்ஸ்ரன்ரைன் லொஹான் ஸ்ரென்விஜ் 3ஏ, சதீஸ்குமார் லதீசனன் 3ஏ, ஜெசிதரன் லதுர்சன் 3ஏ, சிவயோகன் விஷ்ணுஜன் 3ஏ, சிவரஞ்சன் மாதுளன் 3ஏ, முரளிமோகன் மிருணளன் 3ஏ, சிவகுமாரன் சங்கீதனன் 3ஏ, சோதிநாதன் வசீகரன் 3ஏ, தேவானந் ஆனந்தராஜ் 3ஏ, சாந்தகுமார் கவின் 3ஏ, ரமணிதரன் ரதுக்சன் 3ஏ, சந்திரகுமாரன் சங்கீதம் 3ஏ, விஜயகுமார் ஆகாஷ் 3ஏ, லட்சுமிகாந்தன் லிசோகன் 3ஏ, சுபாஷ்கரன் கஜாணன் 3ஏ, கிருஷ்ணவசீகரன் தீனுசன் 3ஏ, கணநாதன் தருண் 3ஏ, விக்னேஷ்வரமூர்த்தி பரத்வாசன் 3ஏ, சிவஞானம் துளசிகன் 2ஏ பி, சுகந்தன் சபிஷன் 2ஏ பி, சுபாஷ்கரன் கஜன் 2ஏ பி, நவரத்தினராசா நிருத்திகன் 2ஏ பி, சிவகுமார் ஹரீசான் 2ஏ பி, உதயாதரன் கிருபரன் 2ஏ பி, சாந்தகுமாரன் கலியுகன் 2ஏ பி, கருணாகரன் மயூரேஷ் 2ஏ பி, சுதன் விஷ்ணு 2ஏ பி, பரமானந்தம் நிகேசன் 2ஏ சி, கேதீஸ்வரன் கரிஜன் 2ஏ சி, அன்ரனிசில்வா டனுசன் 2ஏ சி, மகேஷ்வரன் கஜன் 2ஏ சி

**பௌதீக விஞ்ஞான பிரிவு**

மலர்வண்ணன் அகரன் 3ஏ, சதீஸ்குமார் அபிசகேதிவர் 3ஏ, குருபரன் சங்கரன் 3ஏ, ரெஜினோல்ட்ஸ்கரன் ஜெருஷன் 3ஏ, சுரேந்திரநாதன் லாவண்யன் 3ஏ, சிறீஸ்கந்தராசா கஜலக்சன் 3ஏ, அன்ரனிஜோர்ஜ் பிரின்ஸியம் 3ஏ, பரமேஸ்வரன் சுடரழகன் 3ஏ, செல்வநாயகம் தமீசன் 3ஏ, சண்முகனேசன் குணாளன் 3ஏ, சுஜீவகுமார் சிவேதயன் 3ஏ, செந்தில்குமார் நிதர்சன் 3ஏ, சத்தியசீலன் தேனுஜன் 3ஏ, ஜெகதீசன் ஆர்த்திகன் 3ஏ, ஜெயபாலன் துஷியந் 3ஏ, குகநாதன் டிரோசென் 3ஏ, சிறிகிருஷ்ணகாந்தன் புதுமிகன் 3ஏ, கணேஷ்வரன் அனுசன் 3ஏ, முருகானந்தன் சங்கமன் 3ஏ, விக்னராஜா திரேஷன் 3ஏ, தவபாலன் பகீரதன் 3ஏ, கிருபாகரன் பிரணவன் 3ஏ, அருள்நேசன் மகிந்தன் 3ஏ, ரவிச்சந்திரன் சோபிதன் 3ஏ, நிரஞ்சன் சாகித்தியன் 3ஏ, புவனேந்திரன் சஞ்சீவன் 3ஏ, கோபாலகிருஷ்ணன் கஜதக்சன் 3ஏ, சிவகுமாரன் அபினாஷ் 2ஏ பி, நக்கீரன் ஆதித்தியன் 2ஏ பி, முகுந்தன் பிரணவன் 2ஏ பி, ஹெய்ஞ்சர்லஸ் ஹெட்ரியன் 2ஏ பி, சந்திரகாந்தன் நந்தலாலன் 2ஏ பி, ராசேஷ்வரன் மகிழ்ரஞ்சன் 2ஏ பி, விஜயசந்திரன் சிறிகஜன் 2ஏ பி, செல்வமகேசன் அபிரூபன் 2ஏ பி, பிரணவசொருபன் குருஷேத்திரன் 2ஏ பி, புஷ்பராஜ் கிருஷாந் 2ஏ பி, பரஞ்சோதி விஷ்ணுஜன் 2ஏ பி, சரவணபவன் செரோன் 2ஏ பி, தயாபரகுருக்கள் யதுசனன் 2ஏ பி, அரவிந்தன் அபேர்நாத் 2ஏ பி, உதயதேவன் 2ஏ சி, சதாநந்தன் ஜுஜிந்தன் 2ஏ சி

BIOLOGICAL SCIENCE

3A

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | JAMUNANANTHA PRANAVAN | 01 | 83 |
| 2. | JAMUNANANTHA SARAVANANN | 02 | 85 |
| 3. | RAJAN APIRAM | 03 | 16 |
| 4. | SRISUNDARAJAJAH SRIGANAH | 04 | 27 |
| 5. | DENY CONSTANTINE LOHAAN STENVIG | 07 | 69 |
| 6. | SATHEESKUMAR LATHEESANAN | 08 | 71 |
| 7. | JECITHARAN LATHURSHAN | 12 | 115 |
| 8. | SIVAYOKAN VISHNUJAN | 13 | 128 |
| 9. | SIVARAJAN MATHULAN | 18 | 245 |
| 10. | MURALIMOHAN MIRUNALAN | 21 | 261 |
| 11. | SIVAKUMARAN CHANKEETHANAN | 22 | 298 |
| 12. | SOTHINATHAN VASEEKARAN | 23 | 283 |
| 13. | THEVANANTH ANANTHRAM | 26 | 311 |
| 14. | SANTHAKUMAR KAVEN | 32 | 371 |
| 15. | RAMANITHARAN RATHURSHAN | 37 | 529 |
| 16. | CHANDRAMOHAN SHANGEETHAN | 39 | 533 |
| 17. | VIJAYAKUMAR AAGASH | 43 | 555 |
| 18. | LADSMIKANTHAN LISOKAN | 44 | 624 |
| 19. | SUBASKARAN KAJANAN | 46 | 665 |
| 20. | KIRUSHNAVASEEKARAN THEENUSHAN | 47 | 678 |
| 21. | KANANATHAN THARUN | 64 | 1104 |
| 22. | VIGNESWARAMOORTHY BARATHVASAN | 67 | 1151 |

2AB

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | SIVAGNANAM THULASIKAN | 28 | 338 |
| 2. | SUKANTHAN SABISHAN | 34 | 418 |
| 3. | SUBASKARAN KAJAN | 38 | 538 |
| 4. | NAVARATHINARASA NIRUTHIGAN | 65 | 1115 |
| 5. | SIVAKUMAR HAREESHAAN | 84 | 1625 |
| 6. | UTHAYATHARAN KIRUPARAN | 119 | 2261 |
| 7. | SHANTHAKUMARAN KALIYUKAN | 126 | 2440 |
| 8. | KARUNAKARAN MAYOURESH | 139 | 2478 |
| 8. | SUTHAN VISNU | 150 | 3070 |

2AC

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | PARAMANANTHAM NIKESAN | 111 | 2058 |
| 2. | KETHEESWAREN KARIJAN | 147 | 3020 |
| 3. | ANTONYSILVA DANUSHAN | 175 | 3666 |
| 4. | MAHESWARAN KAJAN | 272 | 5957 |

NON STREAM

3A

1. JEYAMOHAN RAPISAN
2. JEYARASAN ABINAYAN
3. RAGUMAR THARUN

PHYSICAL SCIENCE

3A

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | MALARVANNAN AKARAN | 02 | 04 |
| 2. | SATHEESKUMAR ABISHAKETHEVAR | 05 | 68 |
| 3. | GURUPARAN SHANKARAN | 06 | 71 |
| 4. | REGINOLDSKARAN JERUSHAN | 07 | 139 |
| 5. | SURENDRANATHAN LAAVANYAN | 08 | 182 |
| 6. | SRISKANTHARAJAH KAYALAKSAN | 18 | 1172 |
| 7. | ANTONYGEORGE PRINCESIYAM | 23 | 488 |
| 8. | PARAMESWARAN SUDARALAKAN | 25 | 588 |
| 9. | SELVANAYAGAM THAMEESAN | 27 | 529 |
| 10. | SHANMUGANESAN KUNAALAN | 29 | 600 |
| 11. | SUJEEVAKUMAR SIVODAYAN | 30 | 608 |
| 12. | SENTHILKUMAR NITHARSAN | 33 | 643 |
| 13. | SATHTHIYASEELAN THENUJAN | 34 | 669 |
| 14. | JEGATHESAN ARTHIGAN | 37 | 737 |
| 15. | JEYABALAN THUSHYANTH | 46 | 860 |
| 16. | KUGANATHAN DIROSHEN | 47 | 889 |
| 17. | SRIKIRUSNAKANTHAN PUTHUMIKAN | 51 | 928 |
| 18. | GANESWARAN ANUSHAN | 53 | 966 |
| 19. | MURUGANANTHAN SHANGAMAN | 57 | 1108 |
| 20. | WIGNARAJAH THIRESHAN | 59 | 1111 |
| 21. | THAYABALAN BAGEERATHAN | 62 | 1183 |
| 22. | KIRUBAKARAN PIRANNAYAN | 78 | 1533 |
| 23. | ARULNESAN MAKINTHAN | 79 | 1539 |
| 24. | RAVICHANDRAN SOBITHAN | 82 | 1555 |
| 25. | NIRANJAN SHAHITHTHIYAN | 84 | 1588 |
| 26. | PUVANENTHIRAN SANJEEVAN | 90 | 1751 |
| 27. | GOPALAKIRSHNAN KAJATHAKSAN | 91 | 1778 |

2AB

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | SIVAKUMARAN ABINASH | 55 | 1053 |
| 2. | NAKKEERAN ATHITHTHIYAN | 70 | 1398 |
| 3. | MUKUNTHAN PERANAVAN | 73 | 1453 |
| 4. | HEYNCHARLES HEDRIYAN | 74 | 1476 |
| 5. | CHANDRAKANTHAN NANTHALALAN | 81 | 1551 |
| 6. | RASESWARAN MAKILRAJAN | 85 | 1653 |
| 7. | VIJAYACHANDRAN SRIGAJAN | 97 | 1804 |
| 8. | SELVAMAGESAN ABIRUBAN | 100 | 1976 |
| 9. | PIRANAVASORUBAN KURUSHETHIRAN | 104 | 2015 |
| 10. | PUSPARAJ KIRUSHANTH | 112 | 2150 |
| 11. | PARANCHOTHY VISHNUJAN | 115 | 2216 |
| 12. | SARAVANAPAVAN SHERON | 118 | 2300 |
| 13. | THAYAPARAKURUKKAL JATHUSANAN | 121 | 2354 |
| 14. | ARAVINTHAN ABERNAATH | 122 | 2378 |

2AC

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | UTHAYATHEVAN SANTHOSH | 108 | 2068 |
| 2. | SATHANANTHAN JUJINTHAN | 180 | 3906 |

2AB

1. SRITHARAN THARMIGAN

COMMERCE STREAM

3A

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | VIJAYASUNTHARAM VARANAN | 01 | 122 |

2AB

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | KANTHAROOBAN SANJEY | 15 | 1057 |

2AC

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | KUGANATHAN MITHUNAN | 59 | 6055 |

BIOSYSTEM TECHNOLOGY

3A

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | JEGATHEESWARAN THUSHANTH | 01 | 94 |

ENGINEERING TECHNOLOGY

3A

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | SATKUNARASA SANTHOSH | 02 | 109 |

ARTS

2AB

| | | Dis.Rank | Island Rank |
|---|---|---|---|
| 1. | MURUGAMOORTHY NAJANAN | 06 | 295 |
| 2. | YOGASEELAN SARUJAN | 139 | 4475 |

**பொது பிரிவு**

ஜெயமோகன் பபிசன் 3ஏ, ஜெயராசன் அபிநயன் 3ஏ, ரகுமார் தருண் 3ஏ, சிறிதரன் தர்மிகன் 2ஏ பி

**வணிகப் பிரிவு**

விஜயசுந்தரம் வரணன் 3ஏ, காந்தரூபன் சஞ்சய் 2ஏ பி, குகநாதன் மிதுசன் 2ஏ சி

உயிரியல் தொழில்நுட்பம்

ஜெகதீஸ்வரன் துஷாந் 3ஏ

இயந்திரவியல் தொழில்நுட்பம்

சற்குணராசா சந்தோஷ் 3ஏ

**கலைப் பிரிவு**

முருகமூர்த்தி நயனன் 2ஏ பி, யோகசீலன் சாருஜன் 2ஏ பி

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**பு. கஜிந்தன்**

# அலரி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்து இருக்கின்றோம் – கிளிநொச்சியில் ஜனாதிபதி தெரிவிப்பு!

அலரி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்து இருக்கின்றோம், ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்து இருக்கின்றோம். எதற்காக நாம் கிளிநொச்சிப் பாதைகளை மூடி வைத்திருக்க வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

26-04-2025 அன்று பிற்பகல் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அங்கு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், அனைத்து மக்களும் சமனான உரிமைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த அரசாங்கம் அமைந்துள்ளது.

இந்தப் பகுதிகளில் முப்பது வருடமாக யுத்தம் இடம்பெற்றது இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தாகள் பல கிராமங்கள் இழக்கப்பட்டன பலர் குழந்தைகளை இழந்தார்கள் தங்களுடைய உறவுகளை இழந்தார்கள் வீடுகளை சொத்துக்களை இழந்தார்கள்.

நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஊழலற்ற ஒரு அரசாங்கத்தை அமைத்திருக்கின்றோம். கடந்த காலங்களிலே பாதுகாப்பு காரணங்களுக்காக பொதுமக்களின் காணிகள் இராணுவ முகாம்களுக்காக எடுத்திருக்கின்றார்கள். நாங்கள் இப்போது அந்த காணிகள் தொடர்பில் இராணுவ தலைவர்களிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருக்கின்றோம் விடுவிக்க கூடிய அனைத்து இடங்களையும் மீண்டும் மக்களுக்காக வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.




அது மட்டுமல்ல பாரம்பரியமாக பயிர் செய்து வந்த நிலங்கள் கூகுள் வரைபடத்தின்படி வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பகுதி மக்கள் விவசாயம் செய்த நிலங்கள் மக்களுடைய நிலங்கள் அவற்றை மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

ஆகவே இன்னும் சில பாதைகள் மூடப்பட்டிருக்கின்றன கொழும்பிலே மூடி இருந்த பாதைகளை திறந்து இருக்கின்றோம். குறிப்பாக அலரி மாளிகைக்கு முன்பாக இருந்த பாதையை திறந்து இருக்கின்றோம் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருந்த பாதையை திறந்து இருக்கின்றோம் எதற்காக நாம் கிளிநொச்சிப் பாதைகளை மூடி வைத்திருக்க வேண்டும்





அனைத்து பாதைகளையும் இந்த மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலே நாங்கள் திறந்து விடுவோம்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மூடிய பாதைகளை திறந்து விட்டிருக்கின்றோம். நாட்டை சாதாரண நிலைக்கு கொண்டு வர வேண்டும் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க இருக்கின்றோம். ஏற்கனவே வழங்கப்பட்ட புது திட்டங்களுக்கு நிதிகளை விடுவிக்க இருக்கின்றோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


# யாழ்ப்பாணம் இந்துக் ககல்லூரியில் உயிரியல் பிரிவில் முதல் இரு இடங்களையும் பெற்றுக்கொண்ட இரட்டையர்கள்!


2024ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த இரண்டு மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களை பெற்றுள்ளனர்.

மேலும் குறித்த இருவரும் தேசிய மட்டத்தில் 3ஆம் மற்றும் 5ஆம் இடங்களை பெற்றுள்ளனர்.

சி.ஜமுனானந்தா பிரணவன் (முதலாம் இடம்) மற்றும் சி.ஜமுனானந்தா சரவணன் (இரண்டாம் இடம்) ஆகிய இருவருமே இவ்வாறு உயர்தரத்தில் சாதனை படைத்துள்ளனர்.

மேலும், குறித்த மாணவர்களின் தந்தை யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# Thana Insurance Inc

**T20 INSURANCE**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

**PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

**NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

**20 YEARS TERM - NON MEDICAL INSURANCE**

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

# உப்பும் இல்லை; ஒற்றுமையும் இல்லை

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



அண்மையில் ஒரு கடையில் உப்பு கேட்ட பொழுது ஒரு பாக்கெட் மட்டும்தான் கிடைக்கும் என்று கடைக்காரர் சொன்னார். ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு பாக்கெட். அந்த அளவுக்கு உப்பு தட்டுப்பாடாகிவிட்டது. ஒரு கிலோ உப்பு பக்கெட் 300 ரூபாய்க்கு மேல் போகிறது. ஆனால் இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு. சுத்திவர உப்புக்கடல்.

அதே சமயம் அரசாங்கம் 16 ஆண்டுகளின் பின் தலதா மாளிகையில் உள்ள புனித தந்த தாதுவை பொதுமக்கள் தரிசிப்பதற்கு திறந்து விட்டது. புனித தந்த தாதுவை தரிசிப்பதற்காக லட்சக்கணக்கான மக்கள் கண்டி மாநகரின் தெருக்களில் திரண்டார்கள். நாட்கணக்காக வரிசைகளில் காத்திருந்தார்கள். ஏறக்குறைய சில ஆண்டுகளுக்கு முன்பு பொருளாதாரத் தடை மோசமாக இருந்த ஒரு காலகட்டத்தில், எரிபொருளுக்காக வரிசையில் நின்றதுபோல லட்சக்கணக்கான சிங்கள பௌத்தர்கள் வரிசைகளில் நின்றார்கள். அவர்களுடைய சுகாதாரத் தேவைகளையும் உணவு மற்றும் தங்குமிடத் தேவைகளையும் எதிர்கொள்வதற்கு கண்டி மாநகர நிர்வாகத்தால் முடியவில்லை. ஏன் அரசாங்கத்தாலேயே முடியவில்லை. கண்டி மாநகரின் இடப் பரப்பளவினால் தாங்க முடியாத ஒரு சனத்தொகை. எல்லா இடங்களிலும் குப்பைகள். பெரும்பாலான தெருக்களில் மல நாற்றம். சிறுநீர் நாற்றம். ஒரு பண்பாட்டுத் தலைநகரம் குப்பைக் கூடை போலாகியது. புனித தந்த தாதுவைக் காட்டப் போய் குப்பை கொட்டியதுதான் விளைவா?

அரசாங்கம் அதனை ஒரு தேர்தல் காலத்தில் செய்தமை என்பது தேர்தல் நோக்கங்களைக் கொண்டதுதான் என்று எனது நண்பர் ஒருவர் சொன்னார். சிங்கள பௌத்த கூட்டு உளவியலை கவர்வதற்காக அரசாங்கம் ஒரு பொருத்தமான நேரத்தில் அவ்வாறு புனித தந்த தாதுவை தரிசிப்பதற்கு சிங்கள மக்களை அனுமதித்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

ஏற்கனவே இந்த அரசாங்கம் சிங்கள பௌத்த பொது உளவியலைக் கைப்பற்றியதின் விளைவாகத்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது. அதைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக இவ்வாறு தந்த தாதுவை பொதுமக்கள் தரிசிப்பதற்குத் திறந்து விட்டார்களோ தெரியவில்லை.

ஓர் அரசாங்கம் என்ற அடிப்படையில் அவர்கள் தங்களுக்குள்ள அரச வளங்கள், அனுகூலங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, மறைமுகமாக தேர்தல் பிரச்சாரத்துக்கு உபயோகிக்கின்றார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு பரவலாக உண்டு.

தென்பகுதி மக்களைக் கவர்வதற்கு புனித தந்த தாதுவை தரிசிப்பதற்கு அனுமதித்தது போல,தமிழ்ப் பகுதிகளில் தனது வெற்றிகளை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் பெரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்தி வருகிறது. கூட்டங்களில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரச பிரதானிகள் உரையாற்றி வருகிறார்கள்.

தமிழ்க் கட்சிகளில், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிறீதரன் ஒருவரைத் தவிர வேறு யாரும் இதுவரை அவ்வாறான பெருங்கூட்டங்களை ஒழுங்குப்படுத்தியிருக்கவில்லை. இது ஏறக்குறைய கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது காணப்பட்ட ஒரு நிலைமை. தமிழ்க் கட்சிகளிடம் போதிய அளவு நிதி இல்லை என்பதனால் அவர்கள் அவ்வாறு பெரிய பொதுக்கூட்டங்களை ஒழுங்குபடுத்த முடியவில்லை என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. தமிழ்க் கட்சிகள் இதுவரையிலும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டங்களைத்தான் ஒழுங்குபடுத்தி வருகின்றன. பெரிய பொதுக்கூட்டங்களை ஒழுங்குபடுத்தவில்லை.

பெரிய பொதுக்கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதாக இருந்தால் அதற்கு வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்துதான் திரட்ட வேண்டியுள்ளது என்றும், தொடர்ச்சியாக தேர்தல்கள் நடந்து வரும் காரணத்தால் அவ்வாறு திரட்டுவதற்கு தமிழ் கட்சிகளால் முடியவில்லை என்றும் ஒரு காரணம் கூறப்படுகிறது. அந்தக் காரணம் சரியாக இருந்தால் ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. தமிழ்க் கட்சிகளிடம் கட்சி நிதி என்று அழைக்கக்கூடிய பொது நிதி கிடையாதா? அப்படி இருந்தால் அந்த நிதியை அவர்கள் எப்படி வசூலிக்கிறார்கள்? பொது நிதி இல்லை என்றால் கட்சிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை எப்படித் திட்டமிடுகிறார்கள்? எல்லாவற்றிற்கும் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிதி உதவிகளில் தங்கியிருக்கிறார்களா?

கட்சிகளும் சரி, செயற்பாட்டாளர்களும் சரி, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்றால் அதற்கு முதலில் ஒரு பட்ஜெட்டைப் போட வேண்டும். அந்த நிதியை எங்கிருந்து திரட்டுவது, எவ்வளவு காலத்துக்குள் திரட்டுவது, என்று திட்டமிட வேண்டும். ஒரு பொதுவான நிதிக் கையிருப்பு இருந்தால்தான் தேர்தல் நடவடிக்கைகளை மட்டுமல்ல கட்சிகளின் எல்லா நடவடிக்கைகளையுமே திட்டமிடலாம்.

இதுதான் நிலைமை என்றால், இந்தக் கட்சிகள் எப்படித் தமிழ் மக்களின் இறுதி இலக்கை வென்றெடுக்கப் போகின்றன? ஏனென்றால் எந்த ஒரு அரசியல் நடவடிக்கைக்கும் முதலில் நிதித் திட்டமிடல் இருக்க வேண்டும். நிதித் திட்டமிடல் இல்லாமல் காற்றைக் குடித்துக் கொண்டு அரசியல் செய்ய முடியாது. முழு நேரச் செயல்பாட்டாளர்களுக்கு ஏதோ ஒரு தொகை சம்பளம் வேண்டும். பகுதி நேரச் செயற்பாட்டாளர்களை வைத்துக்கொண்டு கட்சியைக் கட்ட முடியாது. அரசியல் செய்ய முடியாது. எந்த ஒரு கட்சியிடம் முழு நேரச் செயற்பாட்டாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ, அந்தக் கட்சிதான் வினைத்திறன் மிக்கதாக இருக்கும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரங்கில் தமிழ்க் கட்சிகள் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டங்களைத்தான் பெருமளவுக்கு ஒழுங்குபடுத்தி வருகின்றன. அவற்றுக்கும் ஒரு நிதி வேண்டும். அந்த நிதியை அவர்கள் எங்கிருந்து பெறுகிறார்கள்? புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்தா? அல்லது வேறு விதங்களிலா?

எதுவாயினும், தேர்தல் களத்தில் அரசாங்கம்தான் ஒப்பீட்டளவில் பெரிய பொதுக்கூட்டங்களை ஒடுங்குபடுத்தி வருகின்றது. இந்தக் கூட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் திரள்கிறார்கள். இவர்களில் ஒரு பகுதியினரை பஸ்களை விட்டு அரசாங்கம் ஏற்றிக்கொண்டு வருகிறது என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. அதுமட்டுமல்ல, இவ்வாறான பொதுக் கூட்டங்களுக்கு ஜனாதிபதி அனுர வரும் பொழுது அவருடன் கைகளைக் குலுக்குவதற்கு தமிழ்ப் பெண்களும் ஆண்களும் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள். அவரோடு சேர்ந்து தன் படம் எடுப்பதற்குத் தவிக்கிறார்கள். அரசாங்கத்தின் டிஜிட்டல் ப்ரமோஷனுக்கான அணி அந்தக் காட்சிகளைத் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கிட்டு பூங்கா கூட்டத்திலும் சரி வவுனியாவில் நடந்த பொதுக் கூட்டத்திலும் சரி அனுரவை நோக்கி கைகளை குலுக்குவதற்காக ஆண்களும் பெண்களும் முண்டியடிக்கிறார்கள். அவர்கள் அனுரவின் அரசியலை விளங்கி அதைச் செய்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஒரு பிரமுகரோடு, அதிகாரத்தில் இருப்பவரோடு கைகளைக் குலுக்கிக் கொள்வது, ஒன்றாக நின்று தன்படம் எடுப்பது,அந்தப் படத்தைப் பின்னர் சமூகவலைத்தளங்களில் பகிர்ந்து அதற்குக் கிடைக்கும் லைக்குகளை ரசிப்பது..

இது சுயமோகம். செல்ஃபி, அதாவது தன் படம் எடுப்பதற்கான தொழில்நுட்ப வளர்ச்சியோடும் கைபேசிச் செயலிகள், சமூகவலைத்தளங்களின் பெருக்கத்தோடும் மனிதர்களின் சுயமோகம் ஒரு வருத்தம் என்ற வளர்ச்சிக்குக் கிட்ட வந்து விட்டது. அதுபோலவே குறிப்பாக யு ரியுப்களின் பெருக்கத்தோடு பொதுப் புத்திக்கும் அதாவது ஜனரஞ்சகத்துக்கும் அறிவிற்கும் இடையிலான இடைவெளி முன்னப்பொழுதையும் விட ஆழமாகிவிட்டது. இப்படிப்பட்டதோர் தொழில்நுட்பம்சார் உளவியல் பின்னணியில், அனுரவை நோக்கி நூற்றுக்கணக்கான கைகள் கைகுலுக்க நீள்கின்றன.

இது தற்செயலானதா அல்லது திட்டமிட்டு அரங்கேற்றப்படும் நாடகமா என்ற ஆராய்ச்சிகளுக்குமப்பால் ஜனாதிபதி ச ாதாரணமானவர், சாதாரண மக்களுக்கு எளிதாகக் கிடைக்கக் கூடியவர், தொட்டுப் பழகக் கூடியவர்... என்ற ஒரு பிம்பம் ஏற்கனவே ஸ்தாபிதமாகிவிட்டது. அதாவது அனுரவுக்கு ஒரு கதாநாயக அந்தஸ்து உண்டு.இந்த இடத்தில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை நோக்கி ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான கதாநாயக பிம்பங்கள் ஏன் இல்லாமல் போயின? தமிழ்த்தேசிய அரசியல் அரங்கில் உள்ள கட்சித் தலைவர்களுக்கோ அல்லது செயற்பாட்டாளர்களுக்கோ அவ்வாறான கவர்ச்சி ஏன் இல்லாமல் போனது?

இவ்வாறு பொதுக் கூட்டங்களில் அனுரவைக் காண்பதற்கும் அவரோடு கைகுலுக்குவதற்கும் தன் படம் எடுப்பதற்கும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் முண்டியடிக்கும் ஒரு தேர்தல் போட்டிக் களத்தில், தேசிய மக்கள் சக்தியானது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றிகளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் உறுதிப்படுத்தக் கூடுமா என்ற சந்தேகம் அதிகமாக உண்டு.

யாழ். மாநகர சபைக்கான தேர்தல் களத்தில் மணிவண்ணனின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட காரணத்தால் அவர் போட்டி களத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார். ஒரு பிரதான போட்டியாளர் அவ்வாறு அகற்றப்பட்டிருப்பது ஏனைய கட்சிகளுக்கு அதிகம் வாய்ப்பானது. அங்கே அரசாங்கத்தின் வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் ஒரு குழந்தை முகத்தோடு காட்சியளிக்கிறார். அவர் பொருளாதார ரீதியாக நகரத் திட்டமிடல் தொடர்பில் தனக்குள்ள பாண்டியத்தை நிரூபிக்கும் விதத்தில் அறிக்கைகளை விடுகிறார். படித்த யாழ்ப்பாணத்தவர்கள் மத்தியில் அவரை நோக்கிய எதிர்பார்ப்பு உண்டு. மணிவண்ணன் போட்டிக்களத்தில் இல்லாத ஒரு பின்னணியில், அவர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டா?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் உள்ளூர் நிலைமைகளுக்கானவை என்று எல்லாரும் கூறிக்கொள்ளலாம். ஆனால் நடைமுறையில் அது தமிழ்த் தேசியத்திற்கும் சிங்கள பௌத்த பெருந் தேசியத்துக்கும் இடையிலான ஒரு மோதல் களமாகவே காணப்படுகிறது. எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றன. அரசாங்கத்தை அதிலும் குறிப்பாக அரசாங்கத்தின் அடித்தளமாக இருக்கும் ஜேவிபியை எப்படி அம்பலப்படுத்துவது என்பதுதான் அவர்களுடைய பிரதான பிரச்சார உத்தியாக உள்ளது.

அது சரி. ஆனால் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பிரச்சாரம் செய்வதனால் மட்டும் அதனை தோற்கடித்து விட முடியாது. நடைமுறையில் அதை தோற்கடிப்பதற்கான வியூகம் என்பது ஐக்கியம்தான். அதுதான் தமிழ் கட்சிகளிடம் இல்லையே?

அரங்கில் இப்பொழுது நான்கு தமிழ்த் தேசியத் தரப்புகள் உண்டு. தமிழரசுக் கட்சி, முன்னணியின் தமிழ்த் தேசியப் பேரவை, விக்னேஸ்வரனின் கட்சி, சங்குக் கூட்டணி ஆகியவையே அந்த நான்கும். இந்த நான்கும் ஒரே குரலில் தேசிய மக்கள் சக்தியை எதிர்க்கின்றன. ஆனால் அதேசமயம் தங்களுக்கு இடையேயும் ஒருவர் மற்றவரைத் தாக்கி வருகின்றன. "நாங்கள் தான் பெரிய கட்சி, மற்றவை உதிரிக் கட்சிகள்" என்று கூறும் சுமந்திரன் "நாங்கள் ஏனைய கட்சிகளை விமர்சிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம்" என்று கூறுகிறார். ஆனால் நடைமுறையில் உள்ளூரில் ஏனைய கட்சிகளுக்கு எதிராகத்தான் பிரச்சாரம் நடக்கின்றது.

ஏன் அதிகம் போவான்? சுமந்திரன் செயலாளராக இருக்கும் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைக்கும் வெற்றி சுமந்திரனையும் சேரும் என்பதனால் இந்த வெற்றியின்மூலம் மறைமுகமாக சுமந்திரனையும் பலப்படுத்தி விடுவோமா என்ற பயம் பல வேட்பாளர்களிடம் உண்டு. அண்மையில் ஒரு பெண் வேட்பாளர் அவ்வாறு கேட்டதாக சிறீதரன் ஒரு பிரச்சாரக் கூட்டத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

இப்படித்தான் இருக்கிறது தமிழ் கட்சிகளுக்கு இடையிலான போட்டி நிலவரம். இது தேசிய மக்கள் சக்திக்கு அனுகூலமானது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த எதிர்பாராத வெற்றி என்பது தமிழ் ஐக்கியமின்மையின் விளைவாகவே கிடைத்தது. அந்த ஐக்கியமின்மை இப்பொழுதும் உண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையானது ஒரு புதிய ஐக்கிய முயற்சி. ஆனால் அது பிரமாண்டமானது அல்ல.

இப்பொழுதும் தமிழரசுக் கட்சிக்குத்தான் ஒப்பீட்டளவில் வெற்றி வாய்ப்புகள் அதிகம். தமிழரசுக் கட்சி தோற்கடிக்கப்படுமாக இருந்தால் அந்த இடத்தை இட்டு நிரப்பும் கொள்ளளவோடு, தயாரிப்புகளோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இல்லை. நான்கு தமிழ்த் தேசியத் தரப்புகளில் யார் வென்றாலும் அது தேசிய மக்கள் சக்திக்குத் தோல்விதான். ஆனால் இங்குள்ள நிச்சயமின்மை என்னவென்றால், யார் தோற்றாலும் அந்த வெற்றி வாய்ப்பு ஏனைய மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் போகாமல் தேசிய மக்கள் சக்திக்குப் போகக் கூடுமா என்பதுதான்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# நாங்கள் தமிழர்களுடைய அடையாளத்தை விட்டுக்கொடுக்காது தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார் இ.சாள்ஸ் நிர்மலநாதன்



- எஸ்.ஆர்.லெம்பேட் (26-04-2025)

தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய அடையாளங்களுடன் இருக்க வேண்டும் என்பதற்காக எமது வரலாற்றை நாங்கள் கொண்டு செல்ல வேண்டும் என்பதும் எமக்கு காலம் தந்த கடமையாக உள்ளது என வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் நாட்டான் பிரதேச வேட்பாளர்களை ஆதரித்து 25ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை மாலை நானாட்டான் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சார கூட்டம் இடம் பெற்றது. இப் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்களின் அடையாளம், மன்னார் மாவட்டத்தில் உள்ள தமிழர்கள் தமிழரசுக்கட்சியின் இருக்கிறார்கள். அவர்களுடைய என்னம் எல்லாம் நாங்கள் தமிழர்களாக வாழ வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு பிரதேச சபை உள்ளிட்ட நான்கு சபைகளையும் நாங்கள் கைப்பற்றுவதற்கு உழைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

எனவே தமிழ் மக்கள் மாற்றுக் கட்சிக்கு வாக்களிக்காது வீட்டுச்சின்னத்திற் வாக்களித்து தமிழர்களாக நாங்கள் தொடர்ந்து இந்த பிரதேசத்தில் எமது அடையாளங்களுடன் வாழ வேண்டும்.

இலங்கை தமிழரசுக்கட்சி என்ன செய்தது என்று பலருக்கு கேள்வி உள்ளது. இலங்கை தமிழரசு கட்சி தமிழர்களுடைய கட்சி என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். நான் இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட தலைவராக இருக்கின்றேன் என்று சொன்னால் என்னை தெரிவு செய்வது இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர்கள்.

இன்று நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க இருக்கிறார். இதற்கு முன்னர் பலர் நாட்டின் ஜனாதிபதியாக இருந்துள்ளனர்.

நான் பாராளுமன்றம் சென்ற போது மைத்திரிபால சிறிசேன கோட்டபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஜனாதி பதிகளாக இருந்தனர். தற்போது நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க இருக்கிறார். இது நாட்டின் ஜனாதிபதி தேர்தல்.

அது வேறு. இது உள்ளூராட்சி மன்றத் தேர்தல். உள்ளூராட்சி மன்றங்களின் அரசு. நானாட்டான் மக்களினுடைய பிரதேச சபை தேர்தல். அவர்கள் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று இருக்கலாம். ஆனால் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய அடையாளங்களுடன் இருக்க வேண்டும் என்பதற்கு எமது வரலாற்றை நாங்கள் கொண்டு செல்ல வேண்டும் என்பதும் எமக்கு காலம் தந்த கடமையாக உள்ளது.

நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒப்பிட முடியாது. நாட்டின் ஜனாதிபதியாக அவர் இருக்கட்டும். அது வேறு. இது எங்களுடைய உள்ளூர் அரசு. இது தமிழரசு. இது எமது ஆட்சி. எமது ஆட்சியையும், அடையாளத்தையும் நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது.



நாங்கள் தமிழர்களுடைய அடையாளத்தை விட்டுக்கொடுக்காது தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டிருக்கிறோம். எனவே நானாட்டான் பிரதேச சபை தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவத்துடன் செயல்பட வேண்டும். எனவே அனைவரும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி கலைப் பிரிவில் முதலிடம்!

- எஸ்.ஆர்.லெம்பேட் (27-04-2025)




உயர்தர பரீட்சையில் கலைப்பிரிவில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் 26ம் திகதி சனிக்கிழமையன்று வெளியாகின.

அதில் கலை பிரிவில் மன்னார் கல்வி வலயத்தை சேர்ந்த மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 84வது இடத்தையும் பெற்று சாதனை படைத்து மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும் என நாங்கள் மீண்டும் எடுத்துச் சொல்வதற்கு இந்த உள்ளூராட்சித் தேர்தலை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்

## மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன்

- எஸ்.றொசேரியன் லெம்பேட் (26-04-2025)

இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு நிறந்தரமான ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என தமிழ் மக்கள் சொல்வதை நாங்கள் மீண்டும் ஒரு முறை எடுத்துச் சொல்வதற்கு இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 26ம் திகதி அன்று சனிக்கிழமை மாலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கூட்டம் இடம் பெற்றது.

மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வடக்கு கிழக்கில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் கிடைக்கப் பெற்ற வாக்குகளை விட இம்முறை இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அதிகளவான வாக்குகள் கிடைத்தால் மட்டுமே நாங்கள் பாராளுமன்றத்திலே தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுகின்ற போது எமது உரைகளுக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

இந்த நாட்டிலே அரசியல் தீர்வு என்பது ஒரு முக்கியமான விடையம். நிறந்தரமான அரசியல் தீர்வு என்பது சமஸ்டி முறையில் கிடைக்க வேண்டும் என்பதை எமது கட்சியின் பொதுச் செயலாளர் கூறியிருந்தார்.

இந்த நாட்டிலே எமது மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு இல்லாது விட்டால் இந்த நாட்டிலே எமக்கு நிரந்தரமாக வாழ்வு இல்லை என்பதையும் அவர் கூறியிருந்தார்.



இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு நிறந்தரமான ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என தமிழ் மக்கள் சொல்வதை நாங்கள் மீண்டும் ஒரு முறை எடுத்துச் சொல்வதற்கு இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.




பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு இன்று தென்னிலங்கையிலே என்.பி.பி அரசாங்கம் கூறிக்கொண்டு வருகின்ற விஷயம் இலங்கை தமிழரசுக் கட்சியை குறி வைத்து கூறுகிறார்கள். இக்கட்சியை வடக்கு கிழக்கு மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் அரசியல் தீர்வை கேட்கவில்லை என்று கூறுகிறார்கள். இன்று வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால் என்.பி.பி.யினுடைய கவனம் கூடுதலாக செலுத்தப்படுகின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது வடக்கில் வாக்குகளை பெற்றுக் கொண்டார்கள். ஆசனங்களைப் பெற்று ருசி கண்டார்கள். கிழக்கு மாகாணத்தில் பாரிய அடி வாங்கினார்கள்.

என்.பி.பி.அரசாங்கத்தின் அபிவிருத்தி களுக்காக தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்றால் கடந்த 6 மாதங்களுக்குள் என்ன நடந்துள்ளது என்பதை மக்கள் சற்று திரும்பி பார்க்க வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட எந்த வாக்குறுதிகளை அவர்கள் கடந்த 6 மாதங்களுக்குள் நிறைவேற்றி உள்ளார்கள் என்று பார்க்க வேண்டும்.

கடந்த 6 மாதங்களுக்குள் மன்னாரில் என்ன நடந்துள்ளது என்று பார்க்க வேண்டும். மன்னாருக்கு வந்த ஜனாதிபதி சில வாக்குறுதிகளை வழங்கி விட்டுச் சென்றுள்ளார்.

ஆனால் பாராளுமன்ற தேர்தலின் போது மன்னாருக்கு வருகை தந்து வழங்கிய வாக்குறுதிகள் எல்லாவற்றையும் அவர் மறந்து போய் விட்டார். பொய் செல்வதையே ஒரு தொழிலாள என்.பி.பி அரசு வைத்துள்ளது.

தமிழ் மக்கள் மடையர்களாக இருப்பார்கள் என்ற எண்ணம் இருக்கலாம். அதை மாற்றி அமைப்பதற்கான ஒரு தேர்தலாக இத்தேர்தல் அமைய வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# அறுபத்தைந்து ஆண்டுகள் ஒரே குறிக்கோளுக்காக தன்னை அர்ப்பணித்து அதிகாரத்தைப் பெறுவதற்கான மிகப் பாரிய சவாலை வெற்றிகொண்டதுதான் எமது அரசியல் இயக்கம்

**"நாட்டை கட்டியெழுப்பும் ஆர்வத்தோடு மக்கள் சக்தி திரண்ட மேதினக் கூட்டம்" காலி முகத்திடலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமாரவின் பக்குவமான உரை**



அறுபத்தைந்து ஆண்டுகளாக ஒரே குறிக்கோளுக்காக தன்னை அர்ப்பணித்து அதிகாரத்தைப் பெறுவதற்கான மிகப் பாரிய சவாலை வெற்றிகொண்ட தனது அரசியல் இயக்கம், இந்த நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்ற சவாலை நிச்சயமாக வெல்லும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

நாட்டைக் கட்டியெழுப்பி முன்னோக்கி கொண்டுசெல்லத் தயாராக இருக்கும் ஒரு இயக்கத்தால் இன்று நாடு ஆளப்படுகிறது என்றும், அதன்போது, இந்த நாட்டின் தொழிற்சங்க இயக்கமும் தனது பழைய ஆடைகளைக் களைந்து புதிய ஆடைகளை அணிய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் தெரிவித்த ஜனாதிபதி,

நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை வெற்றியடையச் செய்ய அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு அனைத்து தொழிற்சங்க இயக்கங்களுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

காலி முகத்திடலில் மே 1ம் திகதி பிற்பகல் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தி மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டைக் கட்டியெழுப்பும் மக்கள் சக்தி அணிதிரளும் மே தினக் கூட்டம்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இந்த மக்கள் பேரணியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இன்று செயற்படும் ஒரே அரசியல் இயக்கமாக இருப்பது தேசிய மக்கள் சக்தி என்றும், இந்த நாட்டின் எதிர்காலமும் மக்களின் எதிர்காலமும் முழுமையாக தேசிய மக்கள் சக்தியின் கைகளில் உள்ளது என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் முழுமையான உரை வருமாறு,

நாங்கள் நீண்ட காலமாக மே தினத்தை கொண்டாடியிருக்கிறோம். அப்போது அதிகாரத்தை கைப்பற்ற மக்களை திரட்டுவதே நோக்கமாக இருந்தது. இன்று முதல் முறையாக அதிகாரத்தை கைபற்றி நாட்டை கட்டியெழுப்புவதற்கான கூட்டத்தை நடத்துகிறோம். இன்று தேசிய மக்கள் சக்தி மட்டுமே அரசியல் கட்சியாக உள்ளது. இந்நாட்டின் எதிர்காலமும் மக்களின் எதிர்காலமும் தேசிய மக்கள் சக்தியின் கைகளிலேயே உள்ளது. மற்றைய எதுவும் அரசியல் கட்சிகள் அல்ல. அவை இடிபாடுகள் மட்டுமே. ஆனால் சில குரல்கள் கேட்கிறது. அவற்றில் என்ன தெரிகிறது. நீண்ட காலம் அவர்கள் நாட்டை ஆண்டனர். அத்தோடு நின்றுவிடாமல் அதிகாரத்தை தமது தலைமுறையினர் மீது மாட்டியிருந்தனர். மகன், தம்பி, தந்தை மற்றும் மகன்,மருமகன் என்ற வகையில் அதிகார வரைவு மாட்டப்பட்டிருந்தது. தந்தை, தாய், மகள் என்ற வகையில் அதிகார வரைவு மாட்டப்பட்டிருந்தது.

மாமன் மருமகன் அதிகார வரைவு மாட்டப்பட்டிருந்தது. அதனால் அவர்கள் நீண்டகாலமாக அவர்களின் தலைமுறையினர் கைகளில் அதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டு, எமது நாட்டு மக்களை நெருக்கடிக்கும் அநீதிக்கும் உட்படுத்தி அதிகாரத்தை கொண்டுச் செல்ல முடியுமென நினைத்திருந்தனர். ஆனால் கடந்த செப்டம்பர் 21 இந்நாட்டு மக்கள் மிகத் துணிச்சலாக தீர்மானமொன்றை எடுத்தனர். அந்த தீர்மானத்தின் ஊடாக பல தலைமுறைகளுக்கு அதிகார வரைவை மாட்டிக்கொண்டிருந்தவர்களின் கைகளிலிருந்து மக்களின் கைகளுக்கு ஆட்சி மாற்றிக்கொள்ளப்பட்டது. அந்த அதிகார இழப்பு மற்றும் எதிர்பார்ப்புக்களை இழந்ததன் அவலக் குரலை எமக்கு கேட்கிறது.

மறுதிசையில் அவர்கள் அதிகாரத்தில் இருந்த வேளையில் மக்கள் பணத்தை விரயம் செய்து, மிகுந்த வரப்பிரசாதங்களுடன் கூடிய வாழ்வைக் கழித்தனர். பொது சட்டங்களுக்கு அடிபணியாமல் வாழ்ந்தனர். பொதுமக்களுக்கு மேலாக அதிகார பராக்கிரமத்தை கட்டமைத்துக்கொண்டு மக்களுக்கு மேலிருக்கும் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தினர். இன்று என்ன நடந்திருக்கிறது. பொது சட்டத்துக்கு பணிந்துள்ளனர். வரப்பிரசாதங்களை இழந்துள்ளனர். சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதனால் அவர்களுக்கு இப்போது கவலை வந்திருக்கிறது. அதனால் தான் எதிர்த்திசையில் வேதனையின் அவலக்குரல் கேட்கிறது.

இன்னொரு பக்கத்தில் அவர்கள் செய்த குற்றங்களின் அளவை எங்களை விடவும் அவர்களே அறிவார்கள். அவர்கள் செய்த ஊழல்களையும் எங்களை விட நன்றாக அறிவர். அவர்கள் ஊழல் மற்றும் மோசடி, குற்றங்களின் ஈடுபட்ட விதத்தை அறிவார்கள். அதனை போலவே நாம் யார் என்பதையும் அறிவார்கள். நினைவில் கொள்ளுங்கள்! அவர்களின் குற்றங்களை அறிந்திருக்கும் அளவிற்கு நாங்கள் யார் என்பதும் அவர்களுக்கு தெரியும். அதனால் பீதியின் அவலக் குரல் கேட்கிறது. அதனால் அரசியலின் மறுமுனையில் இன்று என்ன இருக்கிறது? எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாததன் வேதனை. வரப்பிரசாதங்களை இழந்திருப்பதன் அவலக்குரல். பீதியில் அல்லாடுகிறார்கள். அதனால் வேறு அரசியல் கட்சிகள் இல்லை. அவர்கள் பொதுவெளியில் வெட்டித்தனமாக பாடித்திரியும் குழுக்களாக மாறியுள்ளனர்.

மார்ச்சில் அரசாங்கம் சரியும் என்று சொல்கிறார்கள். மார்ச் மாதம் முடிந்தவுடன் ஓகஸ்ட் என்று சொல்கிறார்கள். ஓகஸ்ட் வரும் முன்பாக அடுத்த ஏப்ரல் வரை ஒத்திவைக்கிறார்கள். பின்னர் அடுத்தவர் டிசம்பரில் வருவதாக சொல்கிறார். அவை வெட்டித்தனமான பாடல்கள். அந்த பக்கத்தில் அரசியல் கட்சிகள் இல்லை. தூரநோக்கம் இல்லை. ஒருங்கிணைக்கும் இயலுமை இல்லை. செய்வது என்னவென்று தெரியவில்லை. அங்குமிங்கும் சிதறிய தொகுதிகளின் கூட்டிணைவு காணப்படுகிறது. அவை அரசியல் கட்சியல்ல. அதனால் எங்களுக்கு வெளியில் எங்களுக்கு சவாலொன்று இல்லை என்பதை நாங்கள் அறிவோம்.

எங்களுக்கு வெளியே எங்களுக்கு சவாலொன்று உள்ளதா? இல்லை! எங்களுக்கு வெளியில் இன்று காணப்படுவது இடிபாடுக-ளின் கூட்டிணைவே அன்றி சவால் அல்ல. எனவே சவால் எங்கு உள்ளது. எங்களுக்குள்ளேயே எங்களுக்கான சவால் உள்ளது. அதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சவால் இருப்பது எமக்கு அண்மையில்தான். சவால் இருப்பது எமக்கு அருகில் தான். அதனால் சவாலை போக்குவதற்கு நாம் எமக்குள்ளேயே காணப்படுகின்ற எதிர்ப்புக்கள், பொருத்தமின்மை, புதிய நிலைக்கு மாறுவதற்கு இயலாமை,புதிய நிலையை புரிந்துகொள்ள இயலாமை, புதிய நிலைமைக்கு அமைவாக இசைவாக்கம் அடைவது எவ்வாறு? இசைவாக்கம் அடைய இயலாமை என்பன எம்மிடத்திலேயே உள்ளன. வெளியில் வேறு சவால்கள் இல்லை. நாம் யார்? நாம் சிறிய காலமன்றி 65 வருடகால அர்ப்பணிப்பின் உரிமை எம்மிடத்தில் உள்ளது. ஒரு நோக்கத்துக்கான அர்ப்பணித்த கட்சியே இன்று இங்கு கூடியுள்ளது.

பல தலைமுறைகளாக வெற்றி, தோல்வி, கடுமையான சவால்கள், அருகில் இருந்தவர்கள் கைவிட்டுச் சென்றமை, கைவிட்டுச் சென்றது மட்டுமல்லாது எதிரான கட்சிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்களுடன் நாம் நோக்கத்தை கைவிடாமல் இருந்தோம். எனவே நாங்கள் யார்? நோக்கத்துக்கான உரிமைகளை தோலில் சுமந்து செல்லும் அமைப்பு. சில நேரங்களில் நாம் பழகிப்போன அதிகாரத்திற்கு வேலை செய்திருக்கிறோம். இலக்குகளை மிகத்தூரமானவை சவால்கள் நெருக்கமானவை எமக்கு முன்பாக பல குழப்பங்கள், ஆனாலும் நாம் பாடுபட்டோம், எமது வழக்கமான அதிகாரம் எம்மை பாடுபட தூண்டியது. வேலை செய்வதால் வந்த வழக்கம் எம்மை பாடுபட தூண்டியது. இவை அனைத்தையும் செய்து கடந்த செப்டம்பர் 21 அதிகாரத்தை கைபற்றினோம்.

இப்போது எம்மிடம் இருப்பது வழக்கமான அதிகாரம் அல்ல. மாறாக நம்பிக்கையின் அதிகாரமே உள்ளது. எமக்கு நம்பிக்கை உள்ளது. இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். இந்த நாட்டு மக்கள் எம்மை நம்புகிறார்கள். எம்மீது எதிர்பார்ப்புக்களை வைத்துள்ளனர். அரசியல் கட்சி என்ற வகையில் நாங்கள் பொதுமக்களை ஒரு நோக்கத்தை நோக்கி திரட்டிக்கொண்டிருக்கிறோம். அதுவே நம்பிக்கையின் பலம். எனவே எமக்கு இருப்பது அரசியலமைப்பில் கிடைத்த அதிகாரத்தை மிஞ்சி செல்லும், பாராளுமன்றத்தில் எமக்கு கிடைத்த அதிகாரத்தை மிஞ்சிய நம்பிக்கையின் பலம் எம்மிடம் உள்ளது. 65 வருடங்களாக ஒரே நோக்கத்துடன் கடுமையான சவால்களுக்கு மத்தியில் வரம்புகளை மிஞ்சிய அதிகாரத்தை பெற்றுக்கொண்டுள்ள நாங்கள், உறுதியாக இந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையின் சக்தியுடனே நாங்கள் இதில் இறங்கியிருக்கிறோம்.

அதனால் பெரும் நம்பிக்கையோடு நாம் இந்த பணியை செய்கிறோம். மிகப்பெரிய நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நடைமுறை தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. மிகக் கடுமையான யாதார்த்தமே எம்முன் உள்ளது. பாதாளத்திற்குள் விழுந்திருக்கும் பொருளாதாரம், சமூகத்தில் மற்றையவர் மீதான கருணையை இழந்திருக்கும் சமூகம், சட்டம் ஒவ்வொருவரின் தேவைக்கு ஏற்பட நடைமுறைப்படுத்தப்பட்ட சமூகம், எமது நாட்டின் நிறுவனக் கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றின் நோக்கங்கள் முழுமையாக சரிவடைந்திருந்த நிலைமை, சமூக பொறுப்புணர்வு தொடர்பில் அனைத்து பிரஜைகள் மத்தியிலும் சிதைந்துபோன நம்பிக்கை நிறைந்த சமூகமே இருக்கின்றது. எம்முன் இருப்பது யதார்த்தம் கடுமையானது என்பதை நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். ஆனாலும், சமூகத்தின் நீதி மற்றும் நியாயத்துக்காக போராடுகிறோம். கடுமையான யதார்த்தம் எம்முன் இருந்தாலும் எமது நோக்கங்கள் எவ்வாறானது? நாம் சமூகத்தில் நீதியை உருவாக்குகிறோம். நீதியை நிலைநாட்டுகிறோம். அவ்வாறு கைவிடாமல் போராடுவோம். கைவிடப்போதவில்லை!

சமூக நீதியை நிலைநாட்டுவது நாளாந்தம் நடக்கும் தினசரி நிகழ்வல்ல. சமூக நீதியை உருவாக்குவது ஓரிரு இரவுகளில் நடக்காது. ஆனாலும் சமூகத்தின் நீதி மற்றும் நியாயத்திற்காக நாம் மிகவும் சரியான முறையில் செயல்படுகிறோம். அது அனைவருக்கும் தெரியும். பொதுவாக விவசாயியொருவர் தனது அறுவடையை செய்துகொள்ளும் வரையில் எடுக்கின்ற முயற்சிகள் முறையான நெசவாகும். வயல்களை சுத்தப்படுத்தி, வரம்புகளை கட்டி, வயல்களை உழுது, நெல்களை நாட்டி, புல்களை அகற்றி,உரமிட்டு அறுவடை செய்ய வேண்டும். எனவே தனது அறுவடையை பெற்றுக்கொள்ள சரியான முறையொன்று அவசியம் என்பது எந்தவொரு விவசாயிக்கும் தெரியும். அதனை விவசாயிகள் அறிவர். பொதுவாக வீட்டுப் பணிகளை செய்யும் பெண்மணி அதற்கான தகுந்த முறைமையை அறிவார். எழும்புதல், உணவு சமைத்தல், பிள்ளைகளை பராமரித்தல், பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்குதல், வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளல், அவசியமான வருமான வழிகளை உருவாக்குதல் என்ற வகையில் பெண்ணொருவர் வீட்டை பராமரிப்பதும் சரியானதொரு முறையிலாகும்.

எனவே, கடுமையான சமூக யராத்தம் கொண்ட நாட்டில் சமூக நீதியை நிலைநாட்டுவது சமூக நியாயத்தை நிலைநாட்டுவது போகிற போக்கில் செய்யப்படும் காரியம் அல்ல. அது தற்செயலாக நடப்பதும் அல்ல. அது மிக நன்றாக திட்டமிடப்பட்ட நல்லதொரு முறைமையாகும். ஒரே இரவில் பிரதிபலன்களை எதிர்பார்ப்பவர்களுக்கே இதனை சொல்கிறேன். 76 வருடங்களாக அழிவின் ஆழத்திற்கே கொண்டுச் சென்று, ஆறு மாதங்களில் பலனை எதிர்பார்ப்பவர்களுக்குச் சொல்கிறேன். மிகக் கடுமையான யதார்த்தமொன்று உள்ளது அதனை நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

அந்த யதார்த்திற்கு மத்தியில் திட்டமிடப்பட்ட எதிர்காலத்தை உருவாக்க சரியான முறையொன்று அவசியம். எமது செயல்பாடுகளை மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்து அதனை சரியான முறையில் செய்வோம் என்பதை இந்நாட்டு மக்களுக்கு உறுதியாக கூறுகிறேன். வெற்றிகரமாக அதனை செய்வோம். முயற்சி கைவிடப்போவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது தற்செயலாகவோ, எதேற்சையாகவோ நடக்காது. கடுமையான யதார்த்தத்திலிருந்து புதிய சமூகத்தை தோற்றுவிக்க குறுக்கு வழிகள் இல்லை. இது மிகவும் சரியான திட்டமிடப்பட்ட முயற்சியாகும். தேசிய மக்கள் சக்தி மக்களின் எதிர்பார்ப்பு, நோக்கங்கள், மக்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் தன்மை என்ற அனைத்தையும் புரிந்துகொண்டுள்ளது.

நீங்கள் சொல்வதை விடவும் அதிகமாக நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் சக்தியை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம். எனவே நாங்கள் மிகவும் திட்டமிட்டவாறு அழிவுகரமான சமூகத்தை, சரியான பொருளாதாரம் சரியான சமூக அணுமுறைகளுடன் கூடிய பயணத்தை செல்லக்கூடிய நாடாக மாற்றுவதற்கான பயணத்தை ஆரம்பித்திருக்கிறோம். ஆரம்பம் எங்குள்ளது. அதற்கு வழுவான அத்திபாரத்தை இட வேண்டும். அத்திபாரம் இல்லாத நாடே எம்மிடம் இருந்தது. துடுப்பு உடைந்த கப்பலை போன்றது. இலக்கு இல்லாமல் மிதந்துகொண்டிருந்த நாடு. எல்லையின்றி போகிற போக்கில் சென்றுகொண்டிருந்த நாடு. போகிற போக்கில் சென்ற சமூகம், இதனை சரியான பாதைக்கு மாற்ற வலுவான அத்திபாரத்தை இட வேண்டும்.

அதுவே முக்கியமானது. கடந்து வந்த காலத்தில் அத்திபாரத்தை அமைத்தற்காக நாங்கள முடிந்தளவில் பாடுபட்டிருக்கிறோம்.



**(தொடர்ச்சி அடுத்த வாரம்)**



SRI VARASITH VINAYAGAR HINDU TEMPLE OF TORONTO
416-291-8800
LET LOVE BIND US ALL TOGETHER
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
இணைந்து வழங்கும்
19ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மே 10 சனிக்கிழமை
பகல் 2:30 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.




அடகுமாடம் - பவுண் வாங்கி - தங்க நகை கடன்
கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough




பட்டு உலகில் தனித்துவம் படைக்கும்
Fashion World Inc
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5




குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
Thana Insurance Inc.
416.728.5772
Thana Manickavasagar




Qualified Dentist in Your Neighborhood
Sandhurst Family Dental Clinic
Creating Better Smiles Together
Dr. Pavithra Nantheeswarar DDS
416-299-1020




Devadas Law Professional Corporation
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6




அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough




ஸ்ரீரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
647.702.2159




TechSource
Computer & Electronics Liquidator
Etobicoke
647-352-2229
Scarborough
(Kennedy & Sheppard)
416.757.9111




Shop for Auto Parts
747 Autoparts
Markham
905.471.4447
Scarborough
416.285.4447




Breakfast - Lunch - Dinner & More
Datta Food
Always Fresh
100% Vegetarian Food Take-out & Catering
416-297-8402




Mortgage Architects
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca




பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271




Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags
Paper Towels
Toilet Papers,
Napkins
All kind of Plastic Bags
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 905.205.0011




ERAA SUPER MARKET
5930 Finch Ave. E, Scarborough, ON
Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E, Scarborough, ON
Tel: 416.269.2622

NISSAN | VILLAGE NISSAN

# தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**





11/24


உ

முத்தமிழ் குருமணி. கலைமாமணி. டாக்டர்
சாம்பசிவஸ்ரீ.சோமாஸ்கந்த குருஜீ அவர்களின் உருவாக்கத்தில்
1.**மாணவர்வில்லுப்பாட்டு, 2. நினைவுப்பூக்கள் கவிதைத்தொகுப்பு**
ஆகிய இரண்டு தமிழ்கலை நூல்கள்



## வெளியீட்டு விழா



**இடம்-** கனடா .கந்தசாமி கோவில், 733.Birchmount Rd.scarboroch.
காலம். **03-05-2025** சனிக்கிழமை. மாலை **05.00** மணி
**தலைமை-** பேராசிரியர்.திரு.பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள்

-நிகழ்சிநிரல்-

மங்கள விளக்கேற்றல்... இறைவணக்கம்..
**வரவேற்புரை....** சிவஸ்ரீ-ராம்.சர்வலோகேஸ்வரக்குருக்கள்
**தலைமையுரை-** பேராசிரியா.இ.பாலசுந்தரம் அவர்கள்
**ஆசியுரை-** கலாநிதி.சிவஸ்ரீ-நா.சோமாஸ்கந்த குருக்கள்
**சிறப்புரைகள்** 1. திரு.லோகன்.லோகேந்திரலிங்கம் (உதயன்பத்திரிகை)
2. திரு.கீதவாணி ராஜ்குமார் அவர்கள்.
3. திரு.துரை.உதயகரன் அவர்கள்.
வாழ்த்துரை-
**ஆய்வுரைகள்**-1. (மாணவர்வில்லுப்பாட்டு நூல் ஆய்வுரை) திருமதி.கோதை அமுதன். அவர்கள்.
2. (நினைவுப்பூக்கள்.கவிதை நூல் ஆய்வுரை) டாக்டர் திரு.போல் ஜோசப் அவர்கள்.

வெளியீட்டுரை- நூலாசிரியர் கலைமாமணி.டாக்டர்.எஸ்.எஸ்.குருஜீ
கௌரவப்பிரதி. சிறப்புப்பிரதிகள் வழங்கல்.
- **நன்றியுரை....** குருஜீ. கோபிகிருஷ்ண சர்மன்.

அன்பர்கள், தமிழ்க்கலை ஆர்வலர்கள்.அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்

-இங்கனம்-
நூல்வெளியீட்டு ஏற்பாட்டாளர்கள்

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025
**Time:** 6:00 PM
**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

**On 14th June, 2025 in Scarborough Canada**

I would like to congratulate
**CANADA UTHAYAN** and **UTHAYAN AWARDS FOUNDATION**
for hosting the Festival on their 19th Year
and our Best Wishes for their success.



ONTARIO

**Aris Babikian**
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

கனடிய செய்திகள்
Canadian News

# மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் நடத்திய பொதுக் கூட்டமும் சித்திரைப் புத்தாண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது



மார்க்கம் பிராந்தியத்தில் சிறப்பாக இயங்கிய வண்ணம் அங்கு வதியும் தமிழ் மூத்தோர்களின் நலன்களையும் பொழுது போக்கு அம்சங்களையும் ஏற்பாடு செய்யும் அமைப்பானமார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் நடத்திய பொதுக் கூட்டமும் சித்திரைப் புத்தாண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.



கடந்த 25-04-2025 அன்று வெள்ளிக்கிழமை மாலை மார்க்கம் நகரில் உள்ள ஆர்மேனியன் சனசமுக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவங்களுக்கு சங்கத்தின் தலைவர் திரு சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார். தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.





மேற்படி விசேட வைபவங்களில் தற்போது லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள முன்னாள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதி வேட்பாளர் ரிம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் அங்கத்தவர்கள் வழங்கிய பாடல் நிகழ்ச்சி மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன.

கனடா உதயன் பத்திரிகையின் சார்பில் அதன் பிர-தம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் அரசியல் சமூக செயற்பாட்டாளர் Deepak Telreja ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# United Tamil Sports Club in Toronto has achieved the Minor Track Association of Ontario's Indoor Championship Cup 13 consecutive years.

## ரொறன்ரோவில் 13 வருடங்களாக United Tamil Sports Club வீர வீராங்கனிகள் Minor Track Association of Ontario அமைப்பின் சாம்பியன் கேடயத்தைத் தட்டிக் கொண்டனர்.



For 13 consecutive years, United Tamil Sports Club has been the MTA Indoor Champions. This achievement is a testament to the exceptional dedication and performance of all athletes from United Tamil Sports Club. The management Board extends sincere gratitude to every athlete, volunteer, and parent; their commitment and teamwork were instrumental tor their success. The Board also offers special thanks to Club's valued coaches, whose hard work and dedication have cultivated the talent of the athletes, particularly Coach Theva. His many years of contributions in developing our athletes' skills and fostering a unified club environment are deeply appreciated.















The management Board sent a Special note to him saying "This trophy is dedicated to you Theva."

This past weekend, Sunday April 27th, United Tamil Sports Club celebrated their end to the indoor season and bringing back the trophy for the 13th consecutive year. During this celebration, athletes were recognized for their performances and achievements.

**Credits: Raj**
**(Action Click Photography)**
















# சிங்களவரின் தேசிய வீரனும் தமிழரின் இனத் துரோகியும்




**“அநுரகுமார அரசினால் பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்த துரோகங்கள், காட்டிக்கொடுப்புக்கள் பேரினவாத தலைவர்களினால் தியாகங்களாக்கப்பட்டு அவர் ஒரு தேசிய வீரராக போற்றப்படும் நிலையில் பிள்ளையானால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல்போகச்செய்தல்கள், கப்பம் கோரல்கள் தொடர்பிலும் விசாரணைகள் வேண்டுமென்ற வலியுறுத்தல்கள் தமிழர் தரப்பிலிருந்து எழுந்துள்ளன.”**

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

தமிழ் மக்கள் ஆதரிப்பவற்றை சிங்களவர்கள் எதிர்ப்பார்கள், தமிழ் மக்கள் எதிர்ப்பவற்றை சிங்களவர்கள் ஆதரிப்பார்கள். தமிழர்களின் வி-ரோதிகள் சிங்களவர்களின் நண்பர்கள், சிங்களவர்களின் நண்பர்கள் தமிழர்களின் வி-ரோதிகள் தமிழர்களின் துரோகிகள் சிங்களவர்களின் தேசியவீரர்கள். சிங்களவர்களின் தேசியவீரர்கள் தமிழர்களின் தேசத்துரோகிகள். இந்த மனநிலைதான் இலங்கையில் சிங்களவர்-தமிழர்களின் முரண் நிலையாகி இனப்பிரச்சினை தீராப்பிரச்சினையாகத் தொடர இன்னும் காரணமாகவுள்ளது.

இலங்கையில் சிங்கள - தமிழர் இனப் பிரச்சினைக்கான மையப்புள்ளியான “இனவாதம்” அல்லது சிங்கள-தமிழர் பிரிவினைக்கு காரணமான “முரண்நிலை” தற்போது “பிள்ளையான் என்ற தேசிய வீரன் - பிள்ளையான் என்ற தமிழினத் துரோகி” என்ற ஒருவரின் இரு கதாபாத்திரங்கள் ஊடாக மீண்டுமொரு தடவை வெளிப்பட்டு இலங்கையில் சிங்களம் - தமிழ் என்ற இரு துருவங்கள் என்றும் இணைய முடியாது, சிங்களம் - தமிழ் என்ற முரண் நிலையை ஒருபோதும் களைய முடியாது என்ற வரலாற்று உண்மையை நிரூபித்துள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8ஆம் திகதி தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ராஜபக்ஸ க்களின் அரசின் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் விடுதலைப்புலிகளின் முன்னாள் கனிஷ்ட தலைவர்களில் ஒருவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையான் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே சிங்கள - தமிழ் முரண் நிலை மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக பிள்ளையான் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அக் கைது உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான கைதாக பேரினவாத தலைவர்களினால் திசை மாற்றப்பட்டு “உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி பிள்ளையான்” என்று தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - என்.பி.பி. அரசு சித்திரிக்க முற்படுவதாக குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில்தான் விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும் தமிழ் மக்களையும் காட்டிக்கொடுத்த “தமிழினத் துரோகி” என தமிழ் மக்களினால் அடையாளப் படுத்தப்பட்டுள்ள “பிள்ளையான்” தற்போதைய கைதின் பின்னர் சிங்கள பேரினவாத தலைவர்களினாலும் பேரினவாத கட்சிகளினாலும் “தேச பக்தன்”, “தேசிய வீரன்” எனக் கொண்டாடப்படுவதுதான் சிங்களம் - தமிழ் என்ற முரண் நிலையை ஒருபோதும் களைய முடியாது என்ற வரலாற்று உண்மையை மீண்டும் நிரூபித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியான பிள்ளையான் கருணா என அழைக்கப்படும் விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியாகவிருந்த விநாயகமூர்த்தி முரளிதரனுடன் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியேறி கருணா குழுவில் முக்கிய தலைவராக செயற்பட்டார். அத்துடன் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்ற அரசியல் கட்சியையும் கருணா ஆரம்பித்து அதன் தலைவராக இருந்தார். இந்நிலையில் 2007 ஏப்ரலில் கருணா அணியில் இடம்பெற்ற உள்ளக மோதல்களைத் தொடர்ந்து கருணா லண்டனுக்குத் தப்பி ஓடியதை அடுத்து பிள்ளையான் அக்கட்சியின் தலைவரானார். தொடர்ந்து 2008 கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று கிழக்கு மாகாணத்தின் முதலாவது தமிழ் முதலமைச்சரானார். 2012 ஆம் ஆண்டுவரை அவர் முதலமைச்சராக பதவி வகித்தார்.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்ட சந்திரகாந்தன் 2015 அக்டோபர் 14 அன்று கைது செய்யப்பட்டுக் சிறையில் வைக்கப்பட்டார். பிள்ளையான் சிறையில் இருந்தவாறே 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து 2015 அக்டோபரில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த பிள்ளையான் 2020 நவம்பர் 24 ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஸ அரசினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸவினால் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழும் அதே பதவியில் தொடர்ந்து நீடித்தார். 2024 ஜனாதிபதி தேர்தலில் பிள்ளையானும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் ஆதரவாளர்களும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தனர். ரணில் தோல்வியடைந்தார். 2024 பாராளுமன்ற தேர்தலில் பிள்ளையானும் அவரது கட்சியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுதோல்வியை சந்தித்தனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து அவர்களுக்கு துரோகம் செய்து விட்டு வெளியேறி அரசுடனும் இராணுவத்துடனும் இணைந்து விடுதலைப்புலிகளைக் காட்டிக் கொடுத்ததுடன் பிள்ளையானுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.க்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் ஆகியோரின் கொலைகளுடன் தொடர்பிருந்தது. அதுமட்டுமன்றி இன்னும் தமிழ் தேசியப் போராட்டத்திற்கு ஆதரவான பலரின் படுகொலைகள், ஆட்களை காணாமல் போகச் செய்தமை, ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல்கள், உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்கு உதவியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பிள்ளையான் மீது உள்ளன.

ஆனால் இவைகளையெல்லாம் மறுத்த பிள்ளையான், புலிகளே தமக்கு துரோகம் செய்ததாகவும் அப்படி இருந்தும் தானோ தனது குழுவினரோ புலிகளை எந்த இடத்திலும் காட்டிக்கொடுக்கவில்லை, புலிகள் தொடர்பில் இராணுவத்திற்கு தகவல்களை வழங்கவில்லை. புலிகள் அமைப்பில் இருந்தபோதிருந்த அதே உணர்வுடனேயே தற்போதும் இருப்பதாக தொடர்ந்து கூறிவந்தாலும் தமிழ் மக்கள் பிள்ளையானை தமிழினத் துரோகி, தேசத்து துரோகி என்றே அடையாளப்படுத்தினர். பிள்ளையானின் பிரதேச வாதத்திற்கு ஈர்க்கப்பட்ட சிலரே பிள்ளையானை ஆதரித்தனர். இராணுவ, புலனாய்வுப் பிரிவுகளும் எந்த இடத்திலும் பிள்ளையானுக்கு தமக்கும் தொடர்பிருப்பதாக ஏற்றுக் கொள்ளவில்லை. பிள்ளையானை புலிகளுக்கு எதிராக பயன்படுத்தியதை வெளியில் தெரிவிக்கவும் இல்லை.

இவ்வாறானதொரு நிலையில்தான் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக அநுரகுமார அரசினால் பிள்ளையான் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்த துரோகங்கள், காட்டிக்கொடுப்புக்கள் பேரினவாத தலைவர்களானால் ஒப்புக் கொள்ளப்பட்டு வருவதுடன் பிள்ளையானும் தன்னை பாதுகாத்துக்கொள்ள தான் விடுதலைப்புலிகளுக்கு செய்த துரோகங்களையும் தமிழினத்திற்கு எதிரான போரில் இராணுவத்துக்கு செய்த காட்டிக் கொடுப்புக்களையும் கூறிப் புலம்பத் தொடங்கியுள்ளார்.

தான் விடுதலைப்புலிகளை காட்டிக் கொடுக்கவில்லை, தமிழினத்துக்கு துரோகம் செய்யவில்லையென பிள்ளையான் இதுவரை கூறிவந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் பிள்ளையானை சிறையில் சந்தித்த அவரின் சட்டத்தரணியும் பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும் ராஜபக்ஸ அரசில் அமைச் சராகவிருந்தவரும் தீவிர இனவாதியுமான உதய கம்மன்பில பிள்ளையான் தொடர்பில் கூறுகையில்.

நான் பிள்ளையானுடன் சுமார் 30 நிமிடங்கள் பேசினேன். பிள்ளையான் கண்கலங்கியபடி என்னிடம் சொன்னார்: “நான் புலிகளிடம் இருந்து விலகி வந்து, அவர்களை தோற்கடிக்க என் உயிரை பணயமாக வைத்து போராடினேன். அன்று புலிகள் பக்கம் இருந்தவர்கள் இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், பெரிய வியாபாரிகள், என்ஜிஓ தலைவர்கள். அவர்கள் சமூகத்தில் சுதந்திரமாக வாழ்கிறார்கள். ஆனால், ஒரு பொய்யான வழக்குக்காக நான் ஐந்து வருடங்கள் விளக்கமறியலில் இருந்தேன். இறுதியில் வழக்குக்கு சாட்சிகள் இல்லை என்பதற்காக விடுவிக்கப்பட்டேன். இப்போது மீண்டும் என்னை கைது செய்துள்ளனர். நாட்டுக்காக செய்த பணிக்கு இதுதான் பரிசா?” எனக் கேட்டார்.

சமூக ஊடகங்களில் பிள்ளையான் மீது விமர்சனம் செய்யும் இளைஞர்களுக்கு, அவர் யார் என்பது கூட தெரியாது. உண்மையில், பிள்ளையான் போன்றோர் நாட்டுக்காக செய்த பணிக்காக தேசிய வீரராக மதிக்கப்பட வேண்டும். கருணா மற்றும் பிள்ளையான் புலிகளில் இருந்து விலகி எமது இராணுவத்துடன் சேர்ந்ததிலிருந்தே புலிகள் வீழ்ச்சி தொடங்கியது. பிள்ளையானும், கருணா அம்மானும் இராணுவத்திற்கு பெரும் துணையாக இருந்தனர். இவர்கள் 2003-இல் புலிகளிலிருந்து விலகினார்கள். பிள்ளையான் ஒரு உண்மையான தேசபக்தர்.

2006இல் பிள்ளையான் மற்றும் அவருடைய குழு இராணுவத்துடன் சேர்ந்து புலிகளுக்கு எதிராக போராடினர். ஆனால் புலிகள் பக்கம் இருந்து வந்தவர்கள், நாட்டின் வட பகுதியிலிருந்து வந்தவர்கள். ஆகவே, கிழக்கு பகுதியை எளிதில் காத்துக் கொள்ள முடிந்தது. இப்படி சமாதான நாடு உருவாக்கப்பட்டது பிள்ளையான் போன்றவர்கள் உயிரைப் பணயமாக வைத்து போராடியதால்தான்.

பிள்ளையானின் செயல்களுக்கு எதிராக பிரிவினைவாதிகள் அவரை அழிக்கவே விரும்புகிறார்கள். அதனால்தான் தேசிய மக்கள் சக்தியின் வழியாக அவருக்கு எதிரான சதி நடத்தப் பட்டுள்ளது. அந்த துணைவேந்தர் காணாமல் போனது பிள்ளையானுடன் தொடர்புடையதா இல்லையா என்பதை ஒருபுறம் வைக்கலாம். ஏனெனில், இன்று புலிகள் அரசியல்வாதிகளாக பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். தெற்கு துரோகிகளும் ஜனாதிபதியாக இருக்கிறார்கள். இவர்களுக்கு எந்த விதமான விசாரணையுமில்லை. ஆனால் பிள்ளையானுக்கு மட்டும் விதி வேறு. பிள்ளையான் செய்த தவறு - புலிகளிலிருந்து விலகி, நாட்டை காப்பாற்ற உதவியது. இதற்கு அவருக்குக் கிடைத்த பரிசு - சிறை. பிள்ளையான் என்னை தனிப்பட்ட முறையில் இரு முறை மட்டுமே சந்தித்துள்ளார். ஆனால் அவருக்காக நான் இங்கே நிற்பது, பயங்கரவாதத்திற்கு எதிராக நின்றதற்காக யாரையும் தண்டிக்கக் கூடாது என்பதற்காகவே. நாம் அப்படி நிற்காதுவிட்டால் எதிர்காலத்தில் எவரும் தீவிரவாதத்தைக் கைவிட்டு நாட்டுக்கு உதவ முன்வரமாட்டார்கள் என்கின்றார்.

பிள்ளையான் புலிகள் அமைப்பில் இருந்து விலகி, எமது இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டமை போரை முடிப்பதற்கு ஓரளவு பங்களிப்பாக அமைந்தது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரும் முன்னாள் படைத்தளபதிகளில் ஒருவருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவும் தெரிவித்துள்ளார். அதேவேளை யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களை இலக்காகக் கொண்டு இந்த அரசு செயற்படுவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான நாமல் ராஜபக்ஸவும் கூறியுள்ளார்.

ஆக தான் தமிழ் மக்களின் உரிமைக்காகவே தற்போது உழைப்பதாகவும் இராணுவத்துடன் இணைந்து செயற்படவில்லையெனவும் புலிகளையோ போராட்டத்தையோ காட்டிக்கொடுக்கவில்லையெனவும் பிள்ளையான் கூறுவது பொய் என்பதனை அவருக்கு “தேசியவீரர்”, “தேசபக்தர்” பட்டம் கொடுத்து சிங்கள பேரினவாதிகளே காட்டிக் கொடுத்து விட்டனர். அதேபோன்று “நான் புலிகளிடம் இருந்து விலகி வந்து, அவர்களை தோற்கடிக்க என் உயிரை பணயமாக வைத்து போராடினேன்” என்று உதய கம்மன்பிலவிடம் கூறி கண்ணீர் விட்டதன் மூலம் பிள்ளையானும் தான் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்த துரோகத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆகவேதான் தமிழினத்தின் உரிமைகளுக்கு போராடிய விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் காட்டிக்கொடுத்து துரோகம் செய்த பிள்ளையான் “தேசிய வீரன்” என சிங்களவர்களினால் போற்றப்படும் நிலையில் “பிள்ளையான் ஒரு தமிழினத் துரோகி” என தமிழர்களினால் தூற்றப்படுகின்றார். இதுதான் இலங்கையின் இரு தேசிய இனங்களுக்கிடையிலான முடிவின்றித் தொடரும் உணர்வு நிலை. இந்த இரு துருவ மனநிலைதான் இனப்பிரச்சினை தீர்வுக்கான மிகப்பெரும் தடைக்கல்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# வடக்கில் கரையோர பிரதேசங்களில் காணப்படும் போதைப்பொருள் பாவனை குறித்து இளையோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

## மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ

- எஸ்.ஆர்.லெம்பேட் (29-04-2025)

வடக்கில் கரையோர பிரதேசங்களில் காணப்படும் போதைப்பொருள் பாவனை குறித்து இளையோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, போதைப்பொருள் பாவனையில் இருந்து இளையோரை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் "போதைப்பொருள் வேண்டாம் நமது இளையோரை பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் இளைஞர்கள் களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வு 29ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் (29) மன்னாரில் இடம் பெற்றது.

இதன் போது இளைஞர் யுவதிகள்,திணைக்கள அதிகாரிகள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் உள்ள கரையோரப் பகுதிகளை போதை பொருட்களின் மையங்களாக இலங்கையில் பார்க்கக்கூடிய ஏற்றுக்கொள்ள முடியாத விடையமாக இன்று காணப்படுகின்றது.

இந்த போதைப்பொருட்களை எமது இளையோர் சிறுவர்கள், குறிப்பாக பாடசாலை சமூகத்தை சீரழிக்கக் கூடிய நிலையில் பரந்து பட்டு காணப்படுவதை நாங்கள் ஊடகங்கள் மூலம் பார்க்கின்றோம். போதை பாவனையை எவ்வாறு கட்டுப்படுத்துவது, அதில் இருந்து எவ்வாறு எமது இளையோர்களை பாதுகாப்பது என்பது குறித்து நாம் விழிப்புணர்வை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.





அநீதிக்கு எதிராக நாங்கள் எவ்வாறு கூட்டாக குரல் கொடுப்பது?. தொழிலை பெற்றுக் கொள்ள வேண்டும். வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த விழிப்புணர்வை இளையோர் மத்தியில் முன்னெடுத்து வருகிறோம்.

அதனுடன் தொடர்பு பட்டு கடமையாற்றுகின்றவர்களையும் உள்ளடக்கி கூட்டுக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் பசீர் முகமட் நசாக் கலந்து கொண்டு விழிப்புணர்வு கருத்துக்களை முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பொது போக்குவரத்து சாலையின் அவல நிலை – இலங்கை பொது போக்குவரத்து சபையின் தலைவர் திடீர் விஜயம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (30-04-2025)

மன்னார் இலங்கை பொது போக்குவரத்து சாலையின் அவல நிலை தொடர்பில் ஆராய்வதற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை பொது போக்குவரத்து சபையின் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் 30ம் திகதி புதன்கிழமையன்று கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் போக்குவரத்து சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான பேருந்துகள் உரிய பராமரிப்பின்றி மன்னார் போக்குவரத்து சாலையில் நிறுத்தப்பட்டு கவனிப் பின்றிய நிலையில் காணப்பட்ட நிலையில் குறித்த வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் பல வருடங்களாக கொள்வனவு செய்யப்படாமையினால் இந்த நிலை என மன்னார் போக்குவரத்து சாலை தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் இருந்து பல தூர பகுதிகளுக்கான சேவை நீண்ட காலங்களாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது கொழும்பு கண்டி போன்ற தூர பகுதிகளுக்கு மிகவும் பழுதடைந்த பேருந்துகளை மன்னார் போக்குவரத்து சாலை பயன்படுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறான நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் கருத்து தெரிவிக்கையில், மன்னார் பொது போக்குவரத்து சாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் விரைவில் அவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும், அதே நேரம் பழுதடைந்துள்ள பேருந்துகளை மீள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான உதிரிபாகங்கள் விரைவில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள உள்ளதாகவும் அவற்றில் ஐந்து திருத்தப்பட்ட இஞ்சின்கள் விரைவில் மன்னார் போக்குவரத்து சாலைக்கு கையளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதே நேரம் மன்னார் மற்றும் முல்லைத்தீவு பொது போக்குவரத்து சாலைகளின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் பல கோடி பெறுமதியான அரச சொத்துக்கள் விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த நிலைக்கான காரணம் தொடர்பில் விரைவில்

விசாரணைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அதன் அடிப்படை விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாகும் பொது போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்திருந்தார்.





மன்னார் போக்குவரத்து சாலையின் இந்த நிலை தொடர்பிலும் மன்னார் போக்குவரத்து சாலையில் பயன்படுத்தப்படும் பேருந்துகளின் நிலை தொடர்பிலும் நிர்வாக சீர்கேடுகள் தொடர்பிலும் பல வருடங்கள் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் கடந்த இரண்டு வருடங்கள் எந்த ஒரு உயர் அதிகாரிகளும் மன்னார் போக்குவரத்து சாலைக்கு விஜயம் மேற்கொண்டு மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாகவோ பேருந்து சாலையின் நிலை தொடர்பாக பார்வையிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



கவலையின்றி வாடகைக்கு குடியிருங்கள்

வாடகைக்கு குடியிருக்கும் அபார்ட்மெண்ட் பராமரிப்பு பற்றிய புகார்களை சமர்ப்பியுங்கள்

mississauga.ca/rentalstandards

MISSISSAUGA



# வடக்கு, கிழக்கில் மையம் கொண்டுள்ள “அநுர புயல்”

**“வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி விட்டால் தமிழர்கள் எங்களை அங்கீகரித்துள்ளார்கள், ஒரே நாடுதான் அவர்களின் விருப்பம் அவர்கள் சமஷ்டி தீர்வு கேட்கவில்லை, நாட்டில் இனப்பிரச்சினை என்று எதுவுமில்லை என சர்வதேச மட்டங்களில் பிரசாரங்களை முன்னெடுத்து சர்வதேச அழுத்தங்களையும் தமிழர் பிரச்சினைகளை நீர்த்துப்போகச்செய்யும் தந்திரமாகவே அநுர அரசு கிழக்கில் மிரட்டியும் வடக்கில் அபிவிருத்தி ஆசைகாட்டியும் தமிழர்களின் உள்ளூராட்சி சபைகளை கபளீகரம் செய்யத் துடிக்கின்றது”**

**- கே. பாலா -**

இலங்கை சில மாத இடைவெளிக்குள் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்ற இரு பெரும் தேர்தல் களங்களை எதிர்கொண்ட நிலையில் தற்போது மூன்றாவது தேர்தலாக எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது. இத்தேர்தலில் 8,300க்கு மேற்பட்ட ஆசனங்களுக்காக 80000க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் பல்வேறு அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் சார்பில் களமிறங்கியுள்ளதால் தேர்தல் களமும் சூடாகவேயுள்ளது.

ஆனால் இந்தத்தேர்தலில் வழக்கத்துக்கு மாறாக தென்பகுதியை விடவும் தமிழர்தாயகமான வடக்கு,கிழக்கு மாகாணங்களிலேயே தேர்தல் களம் தீப்பிடித்துள்ளது. அதிலும் வழக்கத்திற்கு மாறாக ஆட்சியிலுள்ள அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-என்.பி.பி. அரசு வடக்கு, கிழக்கு மாகாணங்களை முற்றாகவே கைப்பற்றிவிடும் நோக்கில் அடித்தாடத்தொடங்கியுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் தேசியக்கட்சிகள் அதனைத் தடுத்தாடும் வியூகங்களை அமைத்து பிரசாரப்போரைத் தீவிரப்படுத்தியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 48498 வாக்குகள், கிழக்கு மாகாணத்தில் 197689 வாக்குகள் என மொத்தம் 246187 வாக்குகளைப்பெற்ற தேசியமக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியானதுடன் நடத்திய பாராளுமன்றத் தேர்தலில் அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வடக்கு மாகாணத்தில் 5 பாராளுமன்ற ஆசனங்களையும் கிழக்கு மாகாணத்தில் 7 பாராளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றிக்கொண்ட நிலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சிசபைகளை கைப்பற்றி வடக்கு, கிழக்கை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தீவிரமான தேர்தல் பிரசாரங்களில் இறங்கியுள்ளது.

இதன் வெளிப்பாடாகவே தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கிழக்கு மாகாணத்திற்கான சூறாவளி பிரசாரப்பயணத்தை முடித்து 17 ஆம் திகதி வடக்கு மாகாணத்திற்கான பிரசாரப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதற்கிடையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய வடக்கிற்கான பிரசாரப் பயணத்தை முடித்து கிழக்கு மாகாணத்திற்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார். இவர்கள் மட்டுமன்றி அமைச்சர்கள் பலரும் என்றுமில்லாத வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். தமிழ் மொழியிலும் திக்கித்திணறி உரையாற்றி தமிழ் மக்களையும் அவர்களின் வாக்குகளையும் கவர முற்படுகின்றனர்.

இவ்வாறு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மையப்படுத்தி ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-என்.பி.பி. புயல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மையம் கொண்டுள்ள நிலையில் இந்த அநுர அரசுப் புயல் இனப்பிரச்சினை என்ற இலங்கையின் நீண்டகால கருவை கலைத்துவிடுவதுடன் தமிழ் தேசிய அரசியலையும் வாரிச்சுருட்டிக்கொண்டு சென்றுவிடும் என்ற அச்சம் தமிழ் தேசியவாதிகளிடமும் தமிழினவுணர்வாளர்களிடமும் தற்போது ஏற்பட்டுள்ளது. அதற்கு நியாயமான காரணங்களும் உண்டு.

இவ்வாறாக வடக்கு, கிழக்கில் மையம் கொண்டுள்ள அநுர அரசு புயல் மிரட்டியும் அபிவிருத்தி ஆசைகாட்டியும் தமிழர்களின் உள்ளூராட்சி சபைகளை கபளீகரம் செய்து விடத் துடிக்கின்றமைதான் தமிழ்த்தேசிய அரசியலுக்கும் தமிழர் உரிமைசார் விடயங்களுக்கும். இனப்பிரச்சினை தொடர்பான சர்வதேசத்தின் நிலைப்பாட்டுக்கும் பேரச்சுறுத்தலாக மாறியுள்ளது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்கள் தமிழ் தேசியக்கட்சிகளுக்கு பாடம் புகட்டுகின்றோம் என்ற ரீதியில் செய்த வரலாற்றுத் தவறான தேசிய மக்கள் சக்திக்கு 5 பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொடுத்ததன் விளைவுகளை தற்போது தமிழினம்தான் அனுபவிக்கின்ற நிலையில் உள்ளூராட்சி சபைகளும் பறிபோய்விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசியமக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பெற்ற வாக்குகளையும் பாராளுமன்றத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசியமக்கள் சக்தி பெற்றுக்கொண்ட பாராளுமன்ற ஆசன எண்ணிக்கையையும் வைத்துக்கொண்டு “தமிழ் மக்கள் முதல் தடவையாக சிங்கள ஜனாதிபதியையும் சிக்கள்கட்சி ஒன்றின் பாராளுமனற உறுப்பினர்களையும் வடக்கு, கிழக்கில் தெரிவு செய்துள்ளனர். எனவே தற்போது நாட்டில் இனப்பிரச்சினை என எதுவும் கிடையாது” என அநுரகுமார அரசு சர்வதேச மட்டத்தில் தீவிர பிரசாரங்களில் இறங்கியுள்ளது.

அதனை மேலும் உறுதிப்படுத்தவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்கள் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு 5 பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொடுத்ததனால் வடக்கு, மாகாணத்திற்கு ஜனாதிபதி. பிரதமர், அமைச்சர்கள் அடிக்கடி விஜயம் செய்து தமிழ்மக்கள் தொடர்பில் அக்கறையுள்ளவர்கள் போல் காட்டிக்கொள்வதுடன் கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களினால் புறக்கணிக்கப்பட்டதனால் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர் பகுதிகளில் தேசியமக்கள் சக்தி வெற்றிபெறும் உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே அரசு நிதி ஒதுக்குமென மிரட்டுவதுடன் தமது வாக்கு வங்கிக்கு சவாலாக. இடையூறாக இருப்போரை கைது செய்வது, கைது செய்யப்படுவீர்கள் என மிரட்டுவதுமென இரு வியூகங்களில் களம் இறங்கியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் இந்த இரு வியூகங்களில் முதலாவது வியூகம் தற்போது வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. பலவருடங்களாக மூடப்பட்டிருந்த வீதி திறக்கப்படுகின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்கின்றார். வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணம் சென்று தான் தமிழ் மொழியில் பேச விரும்புவதாகக்கூறி திக்கித்திணறி ஓரிரு வார்த்தைகள் தமிழில் பேசுகின்றார். தையிட்டி சட்டவிரோத விகாரை நிலைமைகளை ஆராயவென அமைச்சர்கள் விஜயம் செய்கின்றனர், யாழ்ப்பாணம் அச்சுவேலி நவக்கிரி சித்த மருத்துவமனைக்கு சொந்தமான 2 ஏக்கர் காணி 30 வருடங்களின் பின்னர் இராணுவத்தினரால் மீளக்கையளிக்கப்படுகின்றது. தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் வடக்கிற்கு சென்றுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் இந்த இரு இரு வியூகங்களில் இரண்டாவது வியூகம் தற்போது கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில்தான் மட்டக்களப்பு மாநகர சபை தேசிய மக்கள் கட்சியின் கையில் இருந்தால்தான் நிதி வழங்கப்படும் என்று மட்டக்களப்பில்எவைத்தே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பகிரங்கமாக கூறி தமிழ் மக்களை அச்சுறுத்தியுள்ளார். இது அப்பட்டமான தேர்தல் சட்ட விதிமுறை மீறல். அடுத்ததாக முன்னாள் இராஜாங்க அமைச்சர்களும் கட்சிகளின் தலைவர்களுமான தமிழ் வாக்குகளை ஓரளவுக்கு கவரக்கூடிய வியாழேந்திரன், பிள்ளையான் ஆகியோரின் கைது. இதில் வியாழேந்திரன் பிணையில் வெளிவந்துள்ள நிலையில் பிள்ளையான் தொடர்ந்தும் சிறையில் உள்ளார். அதேவேளை தேசியமக்கள்சக்தி அரசையும் ஜனாதிபதியையும் அதிகம் விமர்சிக்கும் தமிழரசுக்கட்சியின் சாணக்கியன் எம்.பி.யும் எவ்வேளையிலும் ஊழல். மோசடிக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைதாகலாம் என கசிய விடப்படும் தகவல்கள்.

இவ்வாறாக அபிவிருத்தியைக்காட்டியோ, அச்சுறுத்தியோ வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றிவிட அநுரகுமார அரசு தீயாய் வேலை செய்துவரும் நிலையில் தமிழர்தாயகம் முற்றுமுழுதாக பேரினவாதிகளின் கைகளுக்கு சென்றுவிடும் நிலைமையும் இல்லாமல் இல்லை. ஏனெனில் கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத்தேர்தலில் தமிழ் தேசியக்கட்சிகளிடையில் ஏற்பட்ட பிணக்குகள், பிளவுகள் சீர்செய்யப்படாது பிரிவினைகள் தொடர்வதனால் தமிழர்களும் கடந்த தவறை மீண்டும் செய்வதற்கான வாய்ப்புகளுமுள்ளன.

எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மையம் கொண்டுள்ள “அநுர புயல்” தமிழர் பிரதேச உள்ளூராட்சி சபைகளை அள்ளிச்செல்லுமா? தமிழ் தேசிய அரசியலையும், தமிழர் உரிமைக் கோஷங்களையும் தூக்கி சுழற்றி அடிக்குமா? இனப்பிரச்சினை என்ற விடயத்தை காணாமல் போகச் செய்யுமா என்ற கேள்விகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொருவரும் தமிழனாகவும், தன்மானத் தமிழனாகவும் தடம்மாறாத் தமிழனாகவும் தமிழ்தேசிய இனமாகவும் பதிலளிக்க, வாக்களிக்க வேண்டிய தீர்க்கமான தேர்தலாக எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## தமிழ் மொழி (கும்மி)

உலகின் முதன்மொழி ஓங்கு தமிழே!
உயர்ந்த தாயாய் உயர்ந்தவளே!
வலம்வரும் பூமியில் மான்புறு ஓசையாய்
வீச்சாய் மிளிர்கிற மாதே!

வள்ளுவன் தந்த வான்புகழ் குறளை
வாழ்நாள் முழுவதும் ஓதிடவே!
பள்ளிகள் தோறும் படிக்கக் கொடுத்தே!
பாடலாய்ப் பாடிக் காட்டிடுவோம்.

அவ்வையார் அருளிய ஆத்தி சூடியை
ஆர்வமாய்க் கற்றுத் தெளிவோமே!
அவ்வியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவென்று
ஆரம்ப வயதிலே சொல்லிடுவோம்.

தேவாரம் திருமுறை தெளிவாய்க் கற்றுமே!
தினமும் அதனைப் பாடிடுவோம்
ஆவாரம் பூப்போன்ற அழகு தமிழை
ஆனந்த மாகவே கற்றிடுவோம்.

தேனினும் இனிய செந்தமிழ் மொழியை
தேசம் எங்கும் ஒலித்திடவே!
வானிலும் வலம்வர வழிவகை செய்துமே!
வாகை சூடிட வைத்திடுவோம்.

புலம்பெயர் நாட்டில் பரவியே வாழும்
பழம்பெரும் தமிழர் நாமெலாம்
நலமுடன் தமிழை வாழ வைக்கவே!
நம்பிள்ளை நம்மொழி கற்கட்டுமே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1144**

## (வரலாறும் மரபும்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## மன்றுளாடும் வதிரிபீட விநாயகர் ஆலயம்

### கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்

இவ்வாறான சூழ்நிலையில் இவ்வாலயம் முற்றாக அழிக்கப்பட்டது. அதன்பின்னர் இக்கோவில், தியாகரெத்தினமுதலியார் என்பவரது சிறுபுலம் என்னும் காணியில் வட்டவடிவமான குடிலாகப் புனரமைக்கப்பட்டது. இதன் பின் விநாயகப்பெருமானின் ஆலய பரிபாலனம் மூவர் அடங்கிய தர்மகர்த்தா சபையினரால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

ஏறக்குறைய 125 வருடங்களுக்கு முன்னர் தில்லையம்பலம் குமாரசாமி (கணக்கர்) கந்தர் ஆறுமுகம் (சக்கிடுத்தார்) ஆரியர் தில்லைநாதர் (நொத்தாரிசு) என்போர் தர்மகர்த்தாக்களாகக் கடமையாற்றினர். இக்காலத்திலே கணக்கர் குமாரசாமி என்பவர் ஸ்ரீ தண்டாயுதபாணிகோவிலை இக்கோவிலுக்கு வடக்குப் புறத்தே அமைத்துள்ளார். அத்தோடு பல காணிகளையும் இக்கோவிலுக்குத் தர்மசாதனம் செய்துள்ளார்.

சக்கிடுத்தார் ஆறுமுகம் என்பவரும், இவரது மகளைத் திருமணம் செய்த சண்முகம் சுப்ரமணியம் என்பவரும், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பவற்றைக் கல்லால் கட்டியதோடு ஆலயத்தின் தூபியையும் செங்கல்லால் கட்டியுள்ளனர். இவ்வேளையிலே சுப்பையர் என அழைக்கப்பட்ட சுப்ரமணியம் என்பவர் தெற்குத் தெருவடிக் கிணற்றையும், மகாமண்டப மூடுபாதையையும் தனது சொந்தச் செலவிலே கட்டி முடித்தார்.

அக்காலத்திலே ஆலயத்திருப்பணிகளைச் செய்வதற்கு அனைத்து மக்களின் பங்களிப்பும் இடம்பெறவேண்டும் என்ற நல்லெண்ணம் பரவலாகக் காணப்பட்டுள்ளது. 1897 ஆம் ஆண்டு, மூவரடங்கிய தொண்டர் குழுவொன்று மக்களிடம் பிடியரிசி, தேங்காய், சேகரித்து அதன்மூலம் கோவிலுக்கு நிதிசேகரித்தனர். கோவிலில் மானம்பூத் திருவிழா கிரமமாகச் செய்யப் படவேண்டும் எனத் தீர்மானித்து குதிரை வாகனம் ஒன்றையும் செய்வித்தனர். சக்கிடுத்தார் ஆறுமுகம் என்பவர் நடராஜ விக்கிரகமொன்றைத் தாபித்து வைத்தார். நொத்தாரிசு தில்லைநாதரும், அவரின் சகோதரர்கள் மருமக்கள் ஆகியோரும் இணைந்து பல காணிகளையும், வயல்களையும் வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும்பெருமான் விநாயகமூர்த்தி கோவிலுக்குத் தர்மசாதனம் செய்துள்ளனர். நாவற்குழியிலும் சில காணிகள் இக்கோவிலுக்குத் தர்மசாதனமாக வழங்கப்பட்டுள்ளது.

1910 ஆம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்ட தர்மகர்த்தாசபையினர், இவ்வாலயத்தில் நிருத்த மண்டபம், தம்பமண்டபம், வாகனசாலை என்பவற்றைக் கட்டிமுடித்துள்ளனர். அசையாமணியொன்றினைத் திரு. சிற்றம்பலம் என்பவர் உபகரித்துள்ளார். பின்னர் 1945 ஆம் ஆண்டிலே இருந்த மகாசபையினர், முன்பிருந்த திருக்கோவில் தூபியை முற்றாக அகற்றி, வெள்ளைச் சீமெந்தால் நவீன சிற்பங்களை அமைத்து, அழகுமிக்க தூபியைத் தாபித்தனர். அத்தோடு இவ்வாலயத்தின் தெற்குவாசல் மண்டபம், வாகனங்கள், அர்ச்சகரின் வீடு முதலியவற்றையும் இவர்கள் செய்து முடித்தனர். இதனைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு சித்திரை மாதம், இவ்வாலயத்தின் கும்பாபி'ேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

அக்காலத்தில் மக்களிடையே வாசிப்புப்பழக்கத்தை ஏற்படுத்துவதில் இவ்வாலயம் பெரும்பணியாற்றியுள்ளது. இதன் முன்னோடியாகக் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தைக்கட்டுவதற்கு இவ்வாலயத்தின் கோவிற்காணியைக் குத்தகையாக வழங்கியுள்ளனர். இவ்வாறாக படிமுறை வளர்ச்சியாக இவ்வாலயம், சிறப்புற வளர்ச்சிபெற்று வந்துள்ளது. இவ்வேளையிலே மீண்டும் பல புனரமைப்பு வேலைகளைச் செய்து, 1979 ஆம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் பரிபாலனம் செய்த தர்மகர்த்தா சபையினரின் மறைவைத் தொடர்ந்து, 21 பேர் கொண்ட நிர்வாகசபை ஆலயத்தைப் பரிபாலனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிர்வாகசபை ஆலயத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பதற்கு ஓர் யாப்பும் ஏற்படுத்தப்பட்டது.

இதன் பின்னர் பல தசாப்தங்களைத் தாண்டி இவ்வாலயம் பல புனருத்தாரணப் பணிகளிலால் பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. நேரந்தவறாத பூசைகள் இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்றாக விளங்குகின்றது. யோகர் சுவாமிகறோடு தொடர்புபட்ட காரணத்தால் இன்றும் இவ்வாலயம் அருளொளி வீசும் ஆலயமாக விளங்குகின்றது.

*வளரும்...*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## மக்களுக்கு அவலத்தை ஏற்படுத்திய ஒட்டுண்ணி கஜேந்திரன் இன்று தீவக மண் தொடர்பில் நீலிக் கண்ணீர் வடிக்கின்றார் – ஈ.பி.டி.யின் ஊடக செயலாளர் ஸ்ரீகாந்!

தமிழ் மக்களுக்கு அவலத்தை ஏற்படுத்திய செல்வராஜா கஜேந்திரன் என்னும் ஒட்டுண்ணி, தீவக மண் தொடர்பில் இன்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந் தெரிவித்துள்ளார்.

அண்மையில் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் புதன்கிழமை 30ம் திகதியன்று மேற்கொண்ட ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், ஒரு பொறுப்புள்ள கட்சி என்ற அடிப்படையில், எம்மீதும் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மீதும் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

குறிப்பாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், வேலணை பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசார கூட்டம் ஒன்றில் வெளிப்படுத்திய கருத்துக்கள் தொடர்பாக சில உண்மைகளை எமது மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

உண்மையிலேயே, நேர்மையான அரசியல் செய்கின்றவர்ளாக இருந்தால், தீவக மக்களின் நலன்களில் அக்கறையுள்ளவர்களாக இருந்திருந்தால், கிராமங்களின் அபிவிருத்தியை அடிப்படையாக கொண்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தீவக மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக பேசியிருக்க வேண்டும். தெளிவுபடுத்தி இருக்க வேண்டும். அந்த மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைகள் பற்றி பிரஸ்தாபித்திருக்க வேண்டும்.

ஆனால், எமது செயலாளர் நாயகம் தொடர்பாக அபாண்டமான சேறடிப்புக்களை முன்வைத்திருக்கின்றார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சின் கோட்டையாக விளங்கி வருகின்ற தீவகப் பிரதேசத்தில், எமது வாக்கு வங்கிகளை சிதறடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே குறித்த சேறடிப்பு முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது, குதிரை கஜேந்திரன் என்று சொல்லப்படுகின்ற ஒட்டுண்ணி தீவக மண்ணிலே வந்து நீலிக் கண்ணீர் வடித்துவிட்டு சென்றிருக்கின்றது.

கடந்த காலங்களில் எங்களுடைய மக்களுக்கு அவலங்களை ஏற்படுத்தி அதில் குளிர் காய்ந்த அந்த ஒட்டுண்ணி யார் என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளவார்கள்.

கிராமங்கள் தோறும் சென்று இராணுவத்திற்கு ஆள் சேர்துக் கொடுத்தாக இன்று ஜே.வி.பி.யினர் மீது குற்றஞ்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது. அதற்கான ஜே.வி.பி. யினருக்கு கொம்பு சீவிவிட்ட பெருமை இந்த ஒட்டுண்ணிக்கு இருக்கின்றது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இறுதி யுத்த மேகங்கள் வன்னி நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலப் பகுதியில் 40 ஆயிரம் சவப் பெட்டிகளை தயார் செய்யுங்கள் என்று நாடாளுமன்றத்தில் பேசியதன் மூலம், தென்னிலங்கையிலே இருக்கின்ற பேரினவாத தரப்புக்களை உசுப்பேற்றி விட்டு நாட்டை விட்டு ஓடித் தப்பியதுதான் போராட்டத்திற்கு இந்த ஒட்டுண்ணி செய்த அதிஉச்ச பட்சமான தியாகம்.

போகும்போதும் சும்மா செல்லவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொகுச வாகனத்தை சொந்தமாக்கி கொள்வதற்கு 35 இலட்சம் ரூபாய்களை செலுத்த வேண்டும் என்று தெரிவித்து, புலிகளின் வாகனங்களுக்கு பொறுப்பாக இருந்தவர் ஊடாக புலிகளிடம் இருந்து அந்தப் பணத்தினைப் பெற்றுக் சொகுசு வாகனத்தையும் விற்று அதன்மூலம் கிடைத்த பல இலட்சம் ரூபாய்களையும் சுருட்டிக கெர்ண்டு ஓடியதுதான் இந்த ஒட்டுண்ணி தமிழர்கள் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பு.




வன்னியிலே எங்களுடைய மக்கள் கொத்து கொத்தாக செத்துக் கொண்டிருக்கும் போது, வனாந்தாரங்களிலே போக்கிடம் தெரியாமல் அலைந்து கொண்டிருந்த போது, சுவிஸ்லாந்தில் இந்த ஒட்டுண்ணி தேனிலவு கொண்டிடாக் கொண்டு இருந்துவிட்டு, இப்போது கதை சொல்கிறது.

தன்னுடைய தேசியத் தலைமை தேசியக் கடமையை நிறைவேற்றுவதற்காக தன்னை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்ததாம். நாம் கேட்கிறோம். இங்கே மக்கள் செத்துக் கொண்டிருந்தபோது தேனிலவு கொண்டாடுவதுதான். இந்த ஒட்டுண்ணிக்கு வழங்கப்பட்ட தேசியக் கடமையா?

இலங்கையின் புலனாய்வுப் பிரிவினரால் சொந்தத் தம்பி கடத்தப்பட்ட போது, கோட்டாபய ராஜபக்ஸவின் கால்களில் விழுந்த இந்த ஒட்டுண்ணி, தனது தம்பியாரை விடுப்பதற்காக கோட்டபாயவிற்கு செய்த பிரதியுபகாரம் என்ன?

தனக்கு தெரிந்த புலிகள் பற்றிய தகவல்களையும், புலிகளுக்கு உதவியவர்களையும் காட்டிக் கொடுத்ததுதான், அந்தப் பிரதியுபகாரம்.

அந்த காலப் பகுதியில் புலிகளை மீள் உருவாக்க முயற்சிக்கிறார்கள் குற்றச்சாட்டில் கொலை செய்யப்பட்ட தெய்வீகன், கோபி போன்றோரை காட்டிக் கொடுத்ததிலும் இந்த ஒட்டுண்ணிக்கு தொடர்பிருக்கின்றதோ என்ற சந்தேகம் இன்றும் இருக்கின்றது.

அதுமட்டுமா, 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே தமிழ் தேசிய மக்கள் முன்னணி அந்த தேர்தலை புறக்கணிக்கும் தீர்மானத்தினை மேற்கொண்டதாக அந்த தீர்மானத்திற்கான கூட்டுப் பொறுப்பாளிகளில் ஒருவரான மணிவண்ணன் வெளிப்படையாக தெரிவித்திருக்கின்றார்.

குறித்த தீர்மானத்தினை மேற்கொள்வதற்கும் இந்த குதிரை கஜேந்திரன் என்று சொல்லப்படுகின்ற ஒட்டுண்ணிதான் காரணமாக இருந்ததாக சொல்லப்படுகின்றது.

இவ்வாறு தன்னுடைய குறுகிய நலன்களுக்காக சொந்த இனத்தை காட்டிக் கொடுத்த - எமது மக்களுக்கு அவலத்தை ஏற்படுத்திய ஒட்டுண்ணி, எமது தீவக மண்ணிலே போய் நின்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றது.

மணல் கடத்தில்கடத்தில் பேர்வழிகளுக்கும், பொது அமைப்புகளின் ஊடாக மக்களின் பணத்தை ஏப்பமிட்டவர்களுக்கும் வாக்கு கேட்கிறது. இவர்களுக்கு போடுகின்ற வாக்கு சர்வதேசத்திற்கு அழுத்தமாக அமையுமாம்.

கடந்த 16 வருடங்களாக சர்வதேசத்திற்கு காண்பிக்கின்றோம் என்று எத்தனை தடவைகள் எங்களுடைய மக்களை உசுப்பேற்றியிரப்பீர்கள். எதனைச் சாதித்தீர்கள். மக்களுக்கு என்ன நீதியைப் பெற்றுக் கொடுத்தீர்கள்?

தீவகதில் எந்த அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லையாம். தீவகத்தில் காணப்படுகின்ற அபிவிருத்திப் திட்டங்களை பறைசாற்றுகின்ற கல்வெட்டுக்களே இந்த ஒட்டுண்ணியின் கருத்தை கேட்டு தமக்குள் சிரித்திருக்கும்.

அவை அனைத்தும் சுமந்திருப்பது எங்களின் செயலாளர் நாயகத்தின் பெயரை என்பது அவற்றிற்கு தெரியும். எனவே எமது மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

**02-05-2025 வெள்ளி தொடக்கம் 08-05-2025 வியாழன் வரையும்**







**மேஷம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். நண்பகலில் நல்ல தகவல் வரும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். திருமணம் கைக்கூடி வரும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. முன்கோபத்தை குறைக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நீண்ட நாளைய நோய் விலகும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெளிவட்டார பழக்க வழக்கங்கள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். உல்லாசப் பயணம் இனிக்கும். சுதந்திரமாக செயல்படும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்கள் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். கர்ம வினைகள் அகலும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,U




**ரிஷபம்:** சாமார்த்தியமாக செயல்படும் வாரம். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்க்கைத் தரம் உயரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். கிருபைகள் சேரும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கருத்து வேறுபாடுகள் விலகும். பகைவர் பணிந்து நிற்பர். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. புதுமையை விரும்புவீர்கள். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். ஆபரணத்தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். இனிய தகவல் உண்டு. வீண் வம்பு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,X




**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி கிட்டும் வாரம். எண்ணங்கள் பலிதமாகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. விவேகம் கைக்கொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். உடல்சோர்வு ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்திகள் தேடி வரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். தொழில்போட்டி மறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். மனக்கட்டுப்பாடு அவசியம். பயணங்களால் அனுகூலம் உண்டு. பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். வம்புதும்புகள் ஒழியும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். போதாத காலம் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறைத் தேவை. இசை ஆர்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். வயிறு உபாதைகள் வந்து போகும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். காரியங்கள் கை கூடும். வார்த்தைகளில் கவனம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் வரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஆக்கப்பூர்வமான காலம். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். ஆடம்பர சுகங்கள் கூடும். வழக்குகள் தள்ளிப்போகும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். தனச் சேர்க்கையுண்டு. புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச்செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,I




**சிம்மம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன்சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். பேச்சில் நிதானம் தேவை. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். அவமானங்கள் அகலும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பதவி உயர்வு கிட்டும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழி ஆதாயம் உண்டு. தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பூமியால் லாபம் உண்டு. கலவரமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கைப் பிடிப்பு ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் இரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,O




**கன்னி:** எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும் வாரம். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. செயல்பாட்டில் தீவிரம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பாராட்டுக்கள் கூடும். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் பெருகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பணவரவு சுமாராக இருக்கும். உபயோகமான காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,E




**துலாம்:** ஆடம்பர செலவு அதிகரிக்கும் வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வியாபாரம் வெற்றித்தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு உயரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பணவரவு சுமாராக இருக்கும். பால் தானம் செய்வதால் பாவங்கள் விலகும். வம்பு தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிள்ளைகளின் தொல்லை அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. கமி'ன் தொழில் லாபம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு குறையும். மனநிம்மதி அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டு பயணம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். தொட்டது துலங்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கல்விச்செலவு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S.G




**விருச்சிகம்:** மனக்கசப்பு நீங்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். ஏற்றமான தருணம். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கி வசூலாகும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. ***(தொடர்ச்சி 22 பக்கம்)***

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் காணி உரிமையாளர்களுக்கு எதிராக துப்பாக்கியை நீட்டும் அரச அதிகாரிகள்




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மேடைகளில், ஜனாதிபதியின் கீழ் உள்ள முப்படைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களால் வலிந்து கையகப்படுத்தப்பட்ட வடக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்தாலும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் வனப் பாதுகாப்புத் துறையால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்களை தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவர் அம்பலப்படுத்தியுள்ளார்.

மே 6 ஆம் தேதி நடைபெறவுள்ள, உள்ளூராட்சித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, போரின் போது கையகப்படுத்தப்பட்ட மக்களின் நிலங்களை "முறையான ஆய்வுக்குப் பின்னர்" வனப் பாதுகாப்புத் துறை மீள கையளிக்கும் எனக் கூறியிருந்தார்.

"சில காணிகள் பாரம்பரிய பயிரிடப்பட்ட நிலங்கள், கூகுள் வரைபடங்களைப் பார்த்து வனப் பாதுகாப்புத் துறையால் கையகப்படுத்தப்பட்டன. அவை இந்தப் பகுதியில் பயிரிடப்பட்ட நிலங்கள். மக்களின் நிலங்கள். முறையான ஆய்வுக்குப் பின்னர் அவற்றை மீள கையளிக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்."

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு வவுனியாவில் கடந்த வாரம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை தமிழ் அரசுக் கட்சி (ITAK) தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கம், போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய ஒரு குழு, சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு தங்களது காணிக்கான உறுதிப்பத்திரங்களுடன் காணியை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, வனத்துறை அதிகாரி ஒருவரால் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டதாக வெளிப்படுத்தினார்.

"தமிழ் பேசும் மக்கள் 30 வருடங்களாக இடம்பெயர்ந்து இருந்தார்கள். இப்போது அவர்கள் தங்களது காணிகளை துப்பரவு செய்யப்போனால் இந்த திணைக்களம் விடுவதில்லை. வனவளத் திணைக்களத்தினர் கல்லை போடுகிறார்கள், கைது செய்கின்றார்கள், துப்பாக்கியை காட்டுகின்றார்கள். ஆயுதங்களை கொண்டு வந்து காட்டுகிறார்கள். அண்மையில் பூவரசங்குளம் பிரதேசத்தில் அந்த மக்கள் தமது காணிகளுக்கான பத்திரங்களை காண்பித்தபோது அதிகாரி ஒருவர் துப்பாக்கியை காட்டியிருக்கின்றார். அதன் பின்னர் எனக்கு அறிவித்ததும் நான் அங்கு சென்றேன். இந்த விளையாட்டு இங்கு வேண்டாம்."

யாழ்ப்பாண மாவட்டத்தில் வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான 5,397 ஏக்கர் நிலத்தில், 397 ஏக்கர் நிலம் தமிழ் மக்கள் வாழ்ந்த நிலம் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவிக்கின்றார்.

ஏப்ரல் 26, 2025 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழ் மக்களின் நிலங்களிலிருந்து "விடுவிக்கக்கூடிய" ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீள கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் கூறியிருந்தார்.

"பாதுகாப்பு காரணங்களுக்காக மக்களின் நிலங்கள் இராணுவ முகாம்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாங்கள் அறிவோம். அந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் தளபதிகளுடன் நாங்கள் கலந்துரையாடுவோம். விடுவிக்கக்கூடிய ஒவ்வொரு அங்குல நிலத்தையும் விடுவிக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். அது சரிதானே?"

காணிகளை இழந்தவர்கள்

வடக்கில் தொடங்கப்பட்ட போரில் முன்னணியில் இருந்த முப்படையினரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் கைப்பற்றப்பட்ட 2,500 ஏக்கருக்கும் அதிகமான காணிகள், போர் முடிந்து 15 வருடங்களுக்கு பின்னரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்பது இந்த வருட ஜனவரியில் தெரியவந்தது.

அந்த நிலத்தின் பெரும்பகுதி தமிழர்களுக்குச் சொந்தமானது, அதன் உரிமையாளர்கள் இன்னும் தங்கள் வீடுகளை இழந்தது போல் வாழ்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே முப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 2624.29 ஏக்கர் நிலத்தை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்த யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் முன்வைத்த புள்ளி விபரங்களின்படி, போர் முடிவடைந்ததிலிருந்து முப்படையினரால் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்ட அரச மற்றும் தனியார் காணிகளின் அளவு 23,850 ஏக்கர்களாகும்.

ஜனவரி 31, 2025 அன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம், 23,850 ஏக்கர் காணியில் 21,226 ஏக்கர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

முப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மீதமுள்ள 2624.29 ஏக்கர் காணியில், 951 ஏக்கர் அரசுக்கு சொந்தமானது எனவும், மீதமுள்ள 1,673 ஏக்கர், தனியார் காணி எனவும் அவர் அன்று ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்திருந்தார்.

பலாலி விமானப்படை தள விரிவாக்கத்திற்காக விமானப்படையால் வலுக்கட்டாயமாக கையகப்படுத்தப்பட்ட தமிழர்களுக்குச் சொந்தமான 1009.7 ஏக்கர் நிலத்தை விமானப்படை ஏற்கனவே விமான ஓடுபாதைக்காகப் பயன்படுத்தி வருவதாக ஜனாதிபதியிடம் வலியுறுத்திய யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், அந்தப் பகுதியில் 643 தமிழர்களுக்குச் சொந்தமான காணி இருப்பதாகவும் கூறியிருந்தார்.

ஏப்ரல் 26, 2025 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, கொழும்பில் உள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் இல்லங்களுக்கு முன்னால் உள்ள வீதிகள் திறக்கப்பட்டிருந்தாலும், கிளிநொச்சியில் உள்ள வீதிகள் ஏன் மூடப்பட்டுள்ளன? என, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் கேட்டிருந்தார்.

கடந்த ஒக்டோபரில் கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உள்ள வீதியை திறக்க உத்தரவிட்ட புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, வடக்கில் அதையே ஏன் செய்யவில்லை என தமிழ் அரசியல் ஆர்வலர்கள் அப்போது கேள்வி எழுப்பியிருந்தனர்.

"மேலும் பல வீதிகள் மூடப்பட்டுள்ளன. ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உள்ள கொழும்பு வீதி திறக்கப்பட்டுள்ளது. அலரி மாளிகைக்கு முன்னால் உள்ள கொழும்பு வீதி திறக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் உள்ள வீதிகள் ஏன் மூடப்பட்டுள்ளன? மக்கள் பயணிக்கும் வகையில் அந்த வீதிகள் அனைத்தையும் நாங்கள் மீண்டும் திறப்போம்," என குறிப்பிட்ட ஜனாதிபதி, தனது அரசாங்கம் ஏற்கனவே வடக்கில் வீதிகளை திறந்துள்ள விடயத்தையும் வலியுறுத்தினார்.

"யாழ்ப்பாணத்தின் வடக்கில் ஏற்கனவே ஏராளமான வீதிகள் மீண்டும் திறந்துள்ளோம்."

யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்ட வீதிக்கு கடும் நிபந்தனைகள்

எவ்வாறெனினும், வடக்கில் இடம்பெற்ற போர் காரணமாக 34 வருடங்களாக மூடப்பட்டிருந்த வசாவிளான்-பலாலி வீதி மீண்டும் திறக்கப்பட்டது. ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உள்ள வீதிகளுக்கு விதிக்கப்படாத கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, ஏப்ரல் 10 ஆம் திகதி காலை இந்த வீதி மீண்டும் திறக்கப்பட்டது.

இந்த வீதி உயர் பாதுகாப்பு வலையம் மற்றும் இராணுவ குடியிருப்புகள் வழியாகச் செல்வதால், வீதியை பயன்படுத்துவது குறித்த விதிகளைக் குறிப்பிடும் அறிவிப்புப் பலகை நிறுவப்பட்டுள்ளது, மேலும், எந்தவொரு அதிகாரியின் பெயரும் குறிப்பிடப்படாமல், விதிகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மாத்திரமே பொதுமக்களுக்கு திறந்திருக்கும் இந்த வீதியில் பயணிக்கும் பயணிகள் மற்றும் சாரதிகள், எந்த நேரத்திலும் பாதுகாப்புப் படையினரிடம் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த தயாராக இருக்க வேண்டும்.

அந்த வீதியில் எல்லா நேரங்களிலும் நடந்து செல்வதோ அல்லது துவிச்சக்கர வண்டியில் செல்வதோ தடைசெய்யப்பட்டுள்ளதோடு பயணிகள் பேருந்துகளைத் தவிர வேறு எந்த கனரக வாகனங்களிலும் பயணிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், வீதியில் வாகன நிறுத்துமிடமோ அல்லது திருப்பங்களோ இல்லை.

இந்த வீதியில் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வேகம் மணிக்கு 40 கிலோமீட்டர் எனவும் வீதியில் நின்று புகைப்படம் எடுப்பது அல்லது காணொளி பதிவு செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குரு அரவிந்தன் வாசகர் வட்டம்

## குரு அரவிந்தன் வாசகர்வட்டம், திறனாய்வுப்போட்டி – 3

**2025 ஆண்டு திறனாய்வுப் போட்டி- 3 இல் பரிசு பெற்றவர்களின் விவரம்:**

இந்தப் போட்டிக்கு 134 திறனாய்வுக்கட்டுரைகள் இந்தியா, இலங்கை, பிரித்தானியா, மலேசியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து கிடைத்திருந்தன. எல்லாக் கட்டுரைகளும் சிறப்பாகவே இருந்தன. ஆனாலும் இறுதிச்சுற்றுக்காகப் 18 கட்டுரைகள் தெரிவாகி, அவற்றுக்குப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

போட்டியின் நடுவர்களாகப் பேராசிரியர் கரு முத்தயா (தமிழ்நாடு), ஆய்வாளர் முனைவர் வாசுகி நகுலராஜா (கனடா), ஆய்வாளர் டாக்டர் மேரி கியூரி போல் (கனடா), எழுத்தாளர் கே. எஸ் சுதாகர் (அவுஸ்ரேலியா) ஆகியோர் பணியாற் றினார்கள். இவர்களுக்கும் மற்றும் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | சிவகலை சிவப்பிரகாசம், வவுனியா, இலங்கை. |
| இரண்டாம் பரிசு: | சகோதரி அருள் சுனிலா, தேனி, தமிழ்நாடு. |
| மூன்றாம் பரிசு: | மரு.வெ. மாலாபாரதி. ஆரணி. தமிழ்நாடு. |
| நான்காம் பரிசு: | வரதராஜன் ஜூனியர்தேஜ் சீர்காழி, தமிழ்நாடு. |
| ஐந்தாம் பரிசு: | (1) திவானி கந்தசாமி, வவுனியா, இலங்கை. |
| | (2) சீ. கவிதாராணி, பாசறை, இலங்கை. |
| பாராட்டுப்பரிசுகள்: | சிவநேஸ் ரஞ்சிதா, கெக்கிராவ. இலங்கை. |
| | எஸ். ராமேஸ்வரன், கொழும்பு -5. |
| | திருமதி பவானி சச்சிதானந்தன், வத்தளை, இலங்கை. |
| | பி.பி. புஸ்பராஜா, கொழும்பு -1. |
| | சந்திரகௌரி சிவபாலன், ஜெர்மனி. |
| | சிந்துஜா சிவகுமார், அவுஸ்ரேலியா. |
| | த.வேல்முருகன், ஈரோடு, தமிழ்நாடு. |
| | க.பூமணி, சென்னை, தமிழ்நாடு. |
| | இக்பால் அலி, பரகஹதெனியா, இலங்கை. |
| | விமலாதேவி புசுப்பநாதன், ரொறன்ரோ, கனடா. |
| | தீபரதி குபேந்திரன், வாணியம்பாடி, தமிழ்நாடு. |
| | பன்னீர்ச்செல்வம் கருப்பையா, கோலாலம்பூர், மலேசியா. |

சுலோச்சனா அருண் (kurufanclub@gmail.com)
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** ஏற்றுமதி தொழிலில் ஏற்றம் கிடைக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். தனவரவுகள் பெருகும். நிர்வாக பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவு- களை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் கூடும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**தனுசு:** வருமானம் அதிகரிக்கும் வாரம். எதிரிகள் உதிரியாகும் காலம். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்மச்சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் சகாயம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றங்கள் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் போக்கும். வெற்றி எட்டும் காலம். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மன- தில் மகிழ்ச்சியும் சிந்தனையில் முதிர்ச்சியும் பெருகக்கூடிய காலம். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். பேச்சில் துணிவு தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். நிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. பிரார்த்தனையால் பலன் உண்டு. புதிய வேலை வாய்ப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியா- பாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,M




**மகரம்:** வீண் விரயங்கள் குறையும் வாரம். போட்டி, பொறாமைகள் விலகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு பெருகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். வெளியூர் பயணம் வெற்றி தரும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமி'ன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. புண்ணியம் சேரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். பிரச்சனைகள் அகலும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**கும்பம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். கடுமையான காலம். செயல்களில் கவனம் தேவை. பேச்சில் நிதானம் தேவை. மருத்துவச் செலவுக் குறையும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைகளில் ஆர்வம் கூடும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதம் ஆகும். விரக்திகள் மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் உருவாகும். விரயங்கள் கூடும். தேக ஆரோக்கியம் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தாராளமான தனவரவு உண்டு. கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். நட்பு வட்டம் விரிவடையும். காரி வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்காலச் சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். வீண் வம்புகள் அகலும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் கல்வியால் பெருமை சேரும். வெற்றியும், வெகுமதியும் கூடும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**மீனம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வாயில் தேடி வாய்ப்பு வரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். பெற்றோர் நல- னில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். ஆபரண தொழில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். தொழில் வளம் கூடும். வரவுகள் அதிகரிக்கும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். பெண்களுக்கு அணி- கலன் சேரும். பெற்றோர்களின் பாராட்டு கிடைக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். வளமான சிந்தனை உருவா- கும். அலைச்சல் ஆதாயம் தரும். திட்டம் வெற்றி பெறும். பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு பெருமை சேரும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பெண்களுக்கு யோகம் கூடும். பெருமைமிக்க காலமாகும். வறுமையின் வாட்டம் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,7,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J

## கண்ணீர் அஞ்சலி #74

### திரு. வரதலட்சுமி முத்துலிங்கம்



மலர்வு: 27-05-1945
உதிர்வு: 12-04-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #144
12-04-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

**Ontario Senior Tamils Benevolent Association**
**ostba2019@gmail.com ww.ostb5.ca**
**416-473-6880**

## கண்ணீர் அஞ்சலி #73

### திரு. கணபதிப்பிள்ளை ஜெகநாதன்



மலர்வு: 09-05-1936
உதிர்வு: 08-04-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #50
08-04-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

**Ontario Senior Tamils Benevolent Association**
**ostba2019@gmail.com ww.ostb5.ca**
**416-473-6880**

## கண்ணீர் அஞ்சலி #72

### திருமதி. தனலட்சுமி சண்முகநாதன்



மலர்வு: 27-07-1948
உதிர்வு: 25-03-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #94
25-03-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

**Ontario Senior Tamils Benevolent Association**
**ostba2019@gmail.com ww.ostb5.ca**
**416-473-6880**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**










26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்








உதயம் 1517 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 2, 2025


## United Tamil Sports Club in Toronto, had achieved the Minor Track Association of Ontario's Indoor Champions.

# ரொறன்ரோவில் 13 வருடங்களாக இயங்கிவரும் United Tamil Sports Club வீர வீராங்கனிகள் Minor Track Association of Ontario அமைப்பின் சாம்பியன் கேடயத்தைத் தட்டிக் கொண்டனர்.



For 13 consecutive years United Tamil Sports Club has been the MTA Indoor Champions. This achievement is a testament to the exceptional dedication and performance of all athletes from United Tamil Sports Club . The management Board extends sincere gratitude to every athlete, volunteer, and parent; their commitment and teamwork were instrumental tor their success. The Board also offers special thanks to Club's valued coaches, whose hard work and dedication have cultivated the talent of the athletes, particularly Coach Theva. (continued on pg 15)





# "யாழ் மாவட்ட கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தங்கள் பிள்ளைகளையும் இணைத்து தமக்கு கல்விச் செல்வத்தை வழங்கிய பாடசாலைகளுக்கு சேவையாற்ற வேண்டும்"

### சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி — கனடா பழைய மாணவர்கள் சங்கத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழாவில் பேராசிரியர் மா. சின்னத்தம்பி வேண்டுகோள்

"கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் யாழ் மாவட்ட கல்லூரிகளின் பழைய மாணவர்களின் சங்கங்கள் தாங்கள் தாய்க் கல்லூரிகளுக்கு சிறந்த முறையில் சேவையாற்றி வருகின்றன. அந்த வகையில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி- கனடா பழைய மாணவர்கள் சங்கத்தினரும் சிறந்த சேவையாற்றி வருகின்றனர். கடந்த 30 வது ஆண்டுகளாக இவர்களது சேவை தொடர்கின்றது. எனவே இனிவரும் காலங்களில் இந்த சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி- கனடா பழைய மாணவர்கள் சங்கத்தினரும் பதங்கள் பிள்ளைகளையும் தங்களோடு இணைத்து தமக்கு கல்விச் செல்வத்தை வழங்கிய பாடசாலைகளுக்கு சேவையாற்ற வேண்டும். (தொடர்ச்சி 3ம் பக்கம்)

# அறுபத்தைந்து ஆண்டுகள் ஒரே குறிக்கோளுக்காக தன்னை அர்ப்பணித்து அதிகாரத்தைப் பெறுவதற்கான மிகப் பாரிய சவாலை வெற்றிகொண்டதுதான் எமது அரசியல் இயக்கம்

### "நாட்டை கட்டியெழுப்பும் ஆர்வத்தோடு மக்கள் சக்தி திரண்ட மேதினக் கூட்டம்" தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமாரவின் பக்குவமான உரை



அறுபத்தைந்து ஆண்டுகளாக ஒரே குறிக்கோளுக்காக தன்னை அர்ப்பணித்து அதிகாரத்தைப் பெறுவதற்கான மிகப் பாரிய சவாலை வெற்றிகொண்ட தனது அரசியல் இயக்கம், இந்த நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்ற சவாலை நிச்சயமாக வெல்லும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

நாட்டைக் கட்டியெழுப்பி முன்னோக்கி கொண்டுசெல்லத் தயாராக இருக்கும் ஒரு இயக்கத்தால் இன்று நாடு ஆளப்படுகிறது என்றும், அதன்போது, இந்த நாட்டின் தொழிற்சங்க இயக்கமும் தனது பழைய ஆடைகளைக் களைந்து புதிய ஆடைகளை அணிய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை வெற்றியடையச் செய்ய அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு அனைத்து தொழிற்சங்கங்க இயக்கங்களுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார். (தொடர்ச்சி 10ம் பக்கம்)

# மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் நடத்திய பொதுக் கூட்டமும் சித்திரைப் புத்தாண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது



மார்க்கம் பிராந்தியத்தில் சிறப்பாக இயங்கிய வண்ணம் அங்கு வதியும் தமிழ் மூத்தோர்களின் நலன்களையும் பொழுது போக்கு அம்சங்களையும் ஏற்பாடு செய்யும் அமைப்பானமார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் நடத்திய பொதுக் கூட்டமும் சித்திரைப் புத்தாண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 25-04-2025 அன்று வெள்ளிக்கிழமை மாலை மார்க்கம் நகரில் உள்ள ஆர்மேனியன் சனசமுக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவங்களுக்கு சங்கத்தின் தலைவர் திரு சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார். தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

# கொழும்பில் 68 கடினமான இதய சத்திர சிகிச்சைகளை எவ்வித கட்டணங்களும் அறவிடாமல் நிறைவேற்றி பலரது உயிர்களைக் காப்பாற்றிய வைத்தியப் பெருந்தகை காந்திஜி




இலங்கையில் விரல் விட்டு எண்ணக்கூடிய தலை சிறந்த இருதய சத்திர சிகிச்சை நிபுணர்களில் திரு காந்திஜியும் ஒருவர். சுழிபுரத்தை பிறப்பிடமாக கொண்ட இவர், கனடா நிவாரணம் அமைப்பின் நிறுவனர் செந்தில் குமரனின் வேண்டுகோளுக்கிணங்கி கொழும்பு லங்கா மருத்துவமனையில் இதுவரை 68 கடினமான இதய சத்திர சிகிச்சைகளுக்கு எவ்வித கட்டணங்களும் அறவிடாமல் அவற்றை நிறைவேற்றி பலரது உயிர்களைக் காப்பாற்றியுள்ளார். இலவசமாக இந்த அற்புமான வைத்தியப் பெருந்தகை தனது நேரத்தினையும் மாத்திரமல்லாது இவரது குழுவில் பணியாற்றும் 15 மருத்துவ நிபுணர்களின் நேரத்தினையும் இலவசமாக அர்ப்பணித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே காணப்படும் படங்களில் கொழும்பில் உள்ள கனடாவின் தூதுவர் கௌரவ எரிக் அவர்கள் மேற்படி வைத்தியப் பெருந்தகை காந்திஜி அவர்களை கௌரவிப்பதையும் அருகில் கனடா நிவாரணம் அமைப்பின் நிறுவனர் செந்தில் குமரன் நிற்பதையும் காணலாம்.